நீத்தார் யார் ?

ஜ. பேதவையூரானம்

திருவள்ளுவர் பெருமைப்படுத்தும்

# 'நீத்தார்' யார்?

புலவர் மு. தெய்வநாயகம்

மெய்ப் பொருள் பதிப்பகம்

2ஏ, அப்பாத்துரை நாயக்கர் தெரு,

அயன்புரம் :: சென்னை-23

முதற் பதிப்பு அக்டோபர்-1971

விலை ரூ. 1-00

சுசி பிரிண்டர்ஸ் சென்னை-15

# ஆற்றுப்படுத்துரை

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார்
எம்.ஏ. [ஆங்கிலம்] எம்.ஏ. [தமிழ்] விசாரத் [இந்தி]
ஆசிரியர்-முப்பால் ஒளி, திருக்குறள் மணிவிளக்கவுரை.

வள்ளுவ ஆராய்ச்சியில் முனைந்து ஐந்தவித்தான் யார்? வான் எது? போன்ற புரட்சிகரமான ஆராய்ச்சி ஒளிக்கீற்றுகளைப் புனைந்தவர் ஆசிரியர் புலவர் மு. தெய்வநாயகம். அப்புரட்சிகளுக்குள்ளேயே புரட்சிகரமான ஆய்வேடு நீத்தார் யார்? என்பது. இவ்வேட்டின் ஆராய்ச்சிக்கான விதைகளை அவர்முன் ஆய்வேடுகளே, சிறப்பாக ஐந்தவித்தான் யார்? என்ற ஆய்வேடே தந்துள்ளது. ஆயினும் 'நீத்தார் பெருமை' என்னும் அதிகாரத்தில் ஒரு குறட்பாவைப்பற்றிய ஆசிரியரது கருத்து இவ்வேட்டில் வியக்கத்தக்க முறையில் ஒவ்வொரு அதிகாரக் குறட்பாவின் உள்ளாய்வு மூலம் வலியுறுத்தப்படுகிறது.

ஆசிரியரின் ஆராய்ச்சிகளில் நான் தனிப்பட்ட ஈடுபாடு கொண்டுள்ளேன். ஆனால் அதற்குக் காரணம் அவர் முடிபு அன்று, அம்முடிபை அடையும் வகையில் அவர் காட்டும் நடுநிலைமைகோடாத தருக்க முறைமையும் அவர் நுண்மாண் நுழைபுலத்தின் கூரொளி மூலம் நமக்குக்கிட்டும் புதுப்புது வள்ளுவ மெய்ம்மைகளுமே. தவிர, அவர் ஆராய்ச்சி ஒரு புறம் தமிழகத்திலும் இன்னொரு புறம் அகில உலகிலும் திருவள்ளுவர் திருக்குறள் பற்றிய புதுப் புரட்சியைத் தூண்டும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

உலகில் இந்த இருபதாம் நூற்றாண்டில் வள்ளுவ ஆராய்ச்சிக்கு ஒரு புத்தொளி காட்டியவர் செர்மானிய அருட்பெரும் பெரியவரான அறிஞர் ஆல்பெர்ட் சுவைட்சரே யாவார். புலவர் மூ.தெய்வநாயகம் அவர்களின் ஆய்வுரைகள் பொதுவாக, சிறப்பாக இவ்வாய்வுரை ஆங்கிலம், செர்மன் முதலிய மேலைமொழிகளில் பெயர்க்கப்படுமானால், அது உலகில் கட்டாயமாக மனித இன நாகரிகத்துக்கு ஒரு புதிய சிந்தனைப் புரட்சியை உண்டுபண்ணும் என்று கருதுகிறேன்.

கிறித்தவ சமயத்துக்கே இத்தகு மொழிபெயர்ப்பு ஒரு புதிய உயிர்த் தூண்டுதல் தந்தாலும் நான் வியப்படைய மாட்டேன்—தூங்கி வழியும் மேலையுலகக் கிறித்தவ இஸ்லாமிய நெறிகளுக்கு இவ் வள்ளுவச்சிந்தனை புதுவிழிப்பூட்டுவது உறுதி.

கா. அப்பாத்துரை.

# அணிந்துரை

அருள் திரு டாக்டர்
வி. மி. ஞானப்பிரகாசம் அடிகள் M.A., Ph. D.
தமிழ் ஆராய்ச்சி நிலையம், இலயோலா கல்லூரி, சென்னை.

புலவர் தெய்வநாயகம் திருக்குறளில் நடத்தி வரும் ஆய்வுத் தொடரில் இது நான்காவது நூல். ஆராய்ச்சி உலகம் இதற்கு முந்தின நூல்களை விருப்பு வெறுப்பின்றி வரவேற்றதுபோல இதையும் வரவேற்கும்.

'நீத்தார் பெருமை', 'பனுவல் துணிவு,' 'இருமை வகை தெரிந்து', 'ஓரைந்துங் காப்பான்' 'நிறைமொழி';'மறைமொழி'—போன்றதொடர்கள் இந்நூலில் புதுப்பொருள் பெறுகின்றன. தெய்வப் பொருள் பெற்றுப் பொலிவுறுகின்றன, நிறைவு பெறுகின்றன.

இவ்வுண்மை கிறிஸ்தவ உள்ளத்திற்கு மன நிறைவு தருகின்றது. ஏனெனில் 'திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ அழிக்க வந்தேனென்று நினைக்கவேண்டாம். அழிப்பதற் கன்று; நிறைவேற்றுவதற்கே வந்தேன்.' (மத். 5, 17) என்று இயேசு கூறியது இங்கு நிறைவேறுகிறது.

வள்ளுவர் நூல் அறநூலா மறை நூலா என்ற கேள்வி எழுதுவதுண்டு. புலவர் தெய்வநாயகத்தின் முடிவுகளை அறிஞர் உலகம் சீர்தூக்கிச் செப்பனிட்டு ஏற்றுக்கொண்டால், திருவள்ளுவரின் திருக்குறள் திருமறை நூல் என்று துணியலாம்.

புதுச்சிந்தனைகளைச் சான்றுகளுடன் விளக்கும் புலவர் தெய்வநாயகத்தின் நூல் பலரின் பாராட்டைப் பெற்றது; அனைவரின் ஆழ்ந்த ஆய்வுக்குரியது.

வி. மி. ஞானப்பிரகாசம், சே.ச.

# என்னுரை

"ஆயின் ஒவ்வொருவரும் அவரவர்கண்ட உண்மையினை விளக்கிக்கூற முன் வந்தாலன்றி இலக்கிய ஆராய்ச்சி தமிழில் வளராது."

(முன்னுரை—'குறளின் செய்தி' ப. அருணாசலம் எம்.ஏ., எம். லிட்., மலேயா பல்கலைக் கழகம்)

"இப்பொழுது வந்திருக்கும் ஆபத்து மிகப் பெரியது. இப்பொழுது திருவள்ளுவர் கிறிஸ்தவ சமயியே என்று வந்திருக்கிறது. இந்த விபத்து முன்னே வரவில்லை."

(முத்தமிழ்க்காவலர் – புலவர் குழுத்தலைவர் கி. ஆ. பெ. விசுவநாதம் (1971) வள்ளுவரும் குறளும் பக். 19. வள்ளுவர் ஆண்டு கி. மு. 31 என நிறுவிய பெரியவர்களில் ஒருவர்.)

"ஒன்றை மட்டும் கூறுகிறேன். உண்மையாக உழைத்து ஆராய்ச்சி நூல் எழுதும் உழைப்பாளிகளுக்குத் தமிழ் நாட்டிலே இடமில்லை."

*(மயிலை சீனிவேங்கடசாமி—சமணமும்-தமிழும்—முன்னுரை)*

*எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு.*

*—திருவள்ளுவர்*

எல்லோருக்கும் இன்றும் என்றும் என் நன்றி.

*அன்பன்,*

**மு. தெய்வநாயகம்**

## பொருளடக்கம்.

1. பாயிரத்தில் நீத்தார் பெருமை ஏன்? ... 9

2. 'நீத்தார்' பொருளென்ன? ... 13

3. 'நீத்தார்' துறவியா? ... 22

4. 'நீத்தார்' ஒருமையா? பன்மையா? ... 26

5. நீத்தார் கடவுளா? ... 33

6. நீத்தாரின் குணங்கள்? ... 39

7. நீத்தார் யார்? ... 62

## 1. பாயிரத்தில் நீத்தார் பெருமை ஏன்?

தெய்வப் புலமைத் திருவள்ளுவரால் இயற்றப் பட்ட திருக்குறளின், முப்பாலுள் முதற்பாலாக விளங்குவது அறத்துப்பால். அவ்வறத்துப்பாலின் முதற்பகுதி பாயிரமாகும். பாயிரம் பயின்றபின்னரே அறத்தின் மற்ற இயல்களையும், பொருளையும், இன்பத்தையும், பயிலும் வகையில், முப்பால் அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே முப்பாலின் முதன்மை இடத்தைப்பாயிரம் வகிக்கிறது.

*ஆயிரத்து முந்நூற்று முப்ப தாருங்குறளும்*
*பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்*
*வாய் கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ*
*ராய்க் கேட்க வீற்றிருக்கலாம்.*

என்று நத்தத்தனார் என்னும் புலவர் பெருமான் பாயிரத்தைச்சிறப்பித்துக்கூறியுள்ளமை, இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதென, அறிஞர் பெருமக்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட, திருவள்ளுவ மாலையால் நமக்கு விளங்குகிறது.

இப்பாயிரம் கடவுள்வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன்வலியுறுத்தல் ஆகிய நான்கு அதிகாரங்களைக் கொண்டது. பாயிரத்தின் பெயர்களாக இலக்கண நூலாகிய நன்னூல்:

*முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம்*
*புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்.*

எனப் பல பெயர்களைக் கூறுகிறது. பாயிரம் என்பது வரலாறு என நன்னூல் விருத்தியுரை கூறு கிறது. திருக்குறளுக்கு, அறம் என்ற பெயர் வழங்கி வந்தமையைப் புறநானூற்றில் காணப்படும்:

*நிலம்புடை பெயர்வதாயினும், ஒருவன்*
*செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென*
*அறம் பாடிற்றே ஆயிழை கணவ!*

என்ற ஆலத்தூர் கிழாரின் பாடல் நமக்கு அறிவுறுத்துகிறது. அறமாகிய திருக்குறளின் பாயிரமாகிய வரலாறு, அறத்தின் வரலாற்றைக்கூறும் பகுதி என்றாகிறது. அறத்தின் வரலாறு என்ன? அறத்தின் வரலாற்றுக்கும், திருக்குறளின்பாயிரத்துக்கும் உள்ள தொடர்பு என்ன?

திருக்குறளின் பாயிரம் அறிஞர் பெருமக்களால் இதுவரை ஆழம் காண முடியாப்பெருங்கடலாக விளங்குகிறது என்பதை அறிஞர் பெருமக்களே கூறுகின்றனர்.

''கடவுள் வாழ்த்து முதலிய நான்கு அதிகாரங்களை மட்டும் பாயிரமாக வள்ளுவனார் தனியே கொண்டது என்ன காரணம் பற்றி? என்ற கேள்வி நெடுக நிகழ்ந்து வருவதுண்டு" இதற்குத்தக்க விடை இதுகாறும் கேட்டதில்லை.''

[மகாவித்வான் தண்டபாணி தேசிகர். டிசம்பர் 1969.]
"திருக்குறள் அழகும் அமைப்பும்"—பக் 58

*ஆயிரமுகத்தான் அகன்றதாயினும்*
*பாயிரம் இல்லது பனுவல் அன்றே*

ந.சூ. 54

நூலுக்குச் சிறப்புக்கொடுக்கும் நூலின் வரலாற்றைக்கூறும் பாயிரம், திருக்குறளினுள் கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு,நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் ஆகிய நான்கு அதிகாரங்களின் தொகுப்பு ஆகும். திருக்குறளின் பாயிர அமைப்பு மற்றத் தமிழ் நூல்கள் அத்தனைக்கும் மாறுபட்ட முறையில் அமைந்திருக்கிறது. இதற்கான காரணம் அறிஞர் பெருமக்களால் விளக்கப்பட்டதாகத்

தெரியவில்லை, என்பது மகாவித்வான் தண்டபாணி தேசிகர் அவர்கள் கூற்றால் விளங்குகிறது.

அமைப்பைத் தவிர, கடவுள் வாழ்த்திற்குப்பின், வான்சிறப்புக் கூறப்படுவானேன்? 'வான்' என்னும் சொல்லால் வள்ளுவர் சுட்டும் பொருள் என்ன? 'வான்' என்னும் சொல்லால் வள்ளுவர் மழையை மட்டும் பொருளாகக் கொண்டிருப்பாரானால், கடவுளுக்கு அடுத்த இடத்தைப் பெறும் தகுதி, மழையைத் தவிர வேறு பொருளுக்கு இல்லை என்கிறதல்லவா? ஐம்பெரும் பூதங்களுள் மழைக்கு மட்டுமே சிறப்புண்டென்றால் பொருந்துமா? 'யார் யார்க்கும் வானின்றமையாதொழுக்கு' என்ற ஈற்றுக் குறட்பா குறித்து நிற்கும் பொருளென்ன? யாமறிந்த அளவில் இவை போன்ற வினாக்களுக்குத் தக்கவிடை இது வரை கிடைக்கவில்லை.

மேலே கண்டதைப் போன்று இன்னமும் தெளிவுபடுத்தப்படாமல் இருக்கும் தலைப்பே பாயிரத்தின் மூன்றும் அதிகாரமாகிய நீத்தார் பெருமை ஆகும். நீத்தார் பெருமைக்கும் பாயிரத் திற்கும் என்ன தொடர்பு? நீத்தார் பெருமை பாயி ரத்தில் கூறப்படவேண்டிய அவசியம் என்ன? நீத்தார் பெருமைக்கு அடுத்த அதிகாரமாகிய அறன் வலியுறுத்தலுக்கும், முந்திய அதிகாரமாகிய வான் சிறப்பிற்கும் இணைப்பாக நீத்தார் பெருமை எவ்வாறு விளங்குகிறது? நீத்தார் என்னும் சொல்லால் வள்ளுவர் பெருமைப்படுத்துவது யாரை? நீத்தார் பெருமையை நீக்கிவிட்டால், அல்லது வள்ளுவர் கூறாமலிருந்தால், நூலுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய இழப்பு அல்லது குறைவுஎன்ன?

என்பனபோன்ற வினாக்களுக்கு இவ்வதிகாரம் விடை கொடுக்கவேண்டும். ஆனால் இதுவரைவெளி

வந்த விளக்கங்கள் இக்கேள்விகளுக்கு விடை அளிப் பனவாகத்தெரியவில்லை.

எனவே வள்ளுவத்தில், குறைபாடா? அல்லது வள்ளுவத்தை ஆராய்ந்த உள்ளத்தில் குறைபாடா? என்றவினாக்கள் எழுகின்றன.

வள்ளுவத்தில் குறைபாடு எனக்கூற எந்த அறிஞருக்கும் துணிவு வராது. ஏன்? வள்ளுவம் அப்படிப்பட்டது. ஆராய்ந்த உள்ளத்தின் குறை பாடாகத்தான் இருக்கவேண்டும் என நாம்கொள்ள நேரிடுகிறது. உள்ளத்தின் குறைபாடு என்ன?

வள்ளுவரைத் தமிழகச் சூழ்நிலையில் மட்டுமே நாம் நோக்குகிறோமேயன்றி, அதைவிட்டுத்தாண்டி உலகச் சூழ்நிலையில் நோக்குவதில்லை. வள்ளுவன் தமிழன். அவன் எழுதிய மொழி தமிழ். ஆனால் அவனோ அவன் நூலோ தமிழுக்கு மட்டும் உரியன அல்ல. உலகினுக்குரியர். ஆகவேதான் பாட்டுக் கொரு புலவன் பாரதி

> "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
> வான்புகழ் கொண்ட தமிழ்நாடு."

எனப் பாடினான். வள்ளுவனை ஈன்றெடுத்த தாய் தமிழன்னை என்பது உண்மை. ஆனால் அவள் அவனை உலகத்திற்குத் தத்துப் புத்திரனாக ஈந்ததன் மூலம் வான் புகழை அடைந்துவிட்டாள்.

சங்க இலக்கியங்களை மட்டும் கொண்டு ஒப்பிட்டு, நாம் திருக்குறளின் ஆழத்தைக் காண முடியாது. உலகப் பொதுமையில் நாம் திருக் குறளின் பாயிரத்தை நோக்கினால், கடவுள், வான், நீத்தார் ஆகிய மூன்று தலைப்புகளுக்கும், இம் மூன்றின் முடிபாயும் நூலின் உட்பொருளாயும் விளங்கும் அறத்திற்கும், உள்ள இயைபையும்

எளிதாகப் புரிந்துகொள்ள முடியும். அப்போது கடவுள், வான், நீத்தார், அறம் ஆகிய நான்கின் தொகுப்பாகிய அறத்தின் வரலாறும் பாயிரத்தின் பண்பு நமக்கு எளிதில் விளங்கும்.

கடவுள், வான், நீத்தார் ஆகிய மூன்று அதிகாரங்களையும் இயைபுபடுத்தி நமக்கு விளக்குவதில் முதல் இடத்தை வகிப்பது நீத்தார் பெருமையே. இவ்வதிகாரத்தால் சுட்டப்படும் நீத்தார் யார்? என நாம் கண்டு விட்டால், பின்பு மற்றப் படிகளைக் கடப்பது எளிது. எவ்வாறு?

நீத்தார் யார்? நீத்தார் வாழ்த்து எவ்வாறு பாயிரத்திற்கு அவசியம்? என்பனபோன்ற வினாக்களுக்கு விடை கிடைத்து விடுவதால், அதனுடன் தொடர்புடைய 'வான்'க்கும் விளக்கம் கிடைத்து விடுகிறது. அப்போது பாயிரம் விளக்கம் பெறுவதுடன், வள்ளுவரின் உள்ளமும் நமக்குத் தெளிவாகிறது. நீத்தார் யார் என்பதைக் காணப்புகும் நாம் வள்ளுவர் 'நீத்தார்' என்னும் சொல்லை என்ன பொருளில் ஆண்டுள்ளார் என்று நோக்கவேண்டுவது அவசியமாகும்.

## 2. நீத்தார் பொருளென்ன?

வள்ளுவர் தன் நூல் முழுவதிலும் மூன்றே குறட்பாக்களில் மட்டுமே 'நீத்தார்' என்னும் சொல்லை ஆளுகின்றார். அவை யாவன:

### 1. கனவு நிலையுரைத்தல்

*நனவினால் நம் நீத்தார் என்பர் கனவினால்*
*காணார்கொல் இவ்வூரவர்* —1220

## 2. கொல்லாமை

*நிலையஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலை அஞ்சிக்*
*கொல்லாமை சூழ்வான் தலை. — 325*

## 3. நீத்தார் பெருமை

*ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து*
*வேண்டும் பனுவல் துணிவு — 21*

இவற்றின் பொருளை முறையே நோக்குவோம்.

முதற் குறட்பா இன்பத்துப் பாலின் கற்பியலில் கனவுநிலையுரைத்தல் அதிகாரத்தின் இறுதிக்குறள். இது தலைவிக் கூற்ருக அமைந்துள்ளது. '**நனவினுல் நம் நீத்தார்**' என்னும் பகுதிக்கு உரையாசிரியர்கள் கொள்ளும் பொருளை முறையே நோக்குவோம்.

பரிமேலழகர் :— நனவின்கண் நம்மை நீத்தார்.

மணக்குடவர் :— நனவின்கண்ணே நம்மை நீக்கி யகன்ருர்.

பரிதியார் :— நனவினுலே பிரிந்தார்.

காலிங்கர் :— நம்மைக் கையகன்றனர் என்று நனவின்கண் (அவரைக் கொடுமைக் கூறு நிற்பர்)

தேவநேயப் பாவாணர் :— நனவின்கண் நம்மைக் கை விட்டார்.

புலவர் குழந்தை : நனவில் நம்மை விட்டுப் பிரிந்தார்.

டாக்டர். மு. வரதராசனுர் : நனவில் நம்மைவிட்டு நீங்கினுர்.

மேலே காணும் உரையாசிரியர் தொகுப்பி லிருந்து இக்குறட்பாவின் 'நீத்தார்' என்னும்

சொல்லுக்கு நீக்கியகன்ருர், பிரிந்தார், கையகன்றனர், கைவிட்டார், விட்டுப்பிரிந்தார், விட்டு நீங்கிஞர் ஆகிய பொருள் உண்மையை அறிகிரேம். இங்கு குறிக்கப்பட்டுள்ள நீத்தார், நிலையாகப் பிரிந்தே போனவரைக் குறியாமல், சிறிது காலம் பிரிந்தவரைக்குறித்து நிற்கிறது. அதிலும் கனவில் பிரியாது நனவில் மட்டுமே பிரிந்தவர் என்ற சிறப்புப் பொருளையும் சுட்டும்படியாகக் கையாளப்பட்டுள்ளது. ஆகவே, இங்கு நீத்தார் என்பது சிறிது காலம் பிரிந்தவரைக் குறிக்கிறது என்பதைக் காண்கிரேம்.

இரண்டாம் குறட்பாவை நோக்குவோம். இது அறத்துப்பாலின் துறவறவியலில், கொல்லாமை என்னும் அதிகாரத்தின் கீழ், ஐந்தாம் குறட்பாவாகும். இக்குறட்பாவில் 'நிலையஞ்சி நீத்தார்' என்னும் பகுதிக்கு உரையாசிரியர்கள் கூறும் பொருளை நோக்குவோம்.

பரிமேலழகர் : பிறப்பு நின்ற நிலையை அஞ்சிப் பிறவாமைப் பொருட்டு மனை வாழ்க்கையைத் துறந்தார்.

மணக்குடவர் : மனை வாழ்க்கையில் நிற்றலை அஞ்சித் துறந்தவர்.

பரிதியார் : யாக்கை நிலையாமை அறிந்து துறந்தார்.

காலிங்கர் : வினைவழி எய்தி வருகின்ற பிறவித்தன்மையை அஞ்சிப் பிறவாமைக்குக் காரணமாகிய தவநெறி இயற்றுவார்.

புலவர் குழந்தை : தீமை நிலைக்கு அஞ்சி அத்தீமையை விட்டவர்கள்.

தேவநேயப் பாவாணர் : பிறவி நிலைமைக்கு அஞ்சி அதனின்று விடுதலைபெறும் பொருட்டு உலகப்பற்றைத் துறந்தவர்.

தண்டபாணிப் பிள்ளை : பிறவியிற் கட்டுண்டு நிற்றலை அஞ்சி, அக்கட்டினின்று விடுபெறுதல் கருதி இல்வாழ்க்கையைத் துறந்தார்.

சாமிசிதம்பரனுர் : மீண்டும் பிறக்கும் நிலைக்குப் பயந்து துறந்தவர்.

டாக்டர். மு. வரதராசனுர் : வாழ்க்கையின் தன்மையைக் கண்டு அஞ்சித் துறந்தவர்.

மேலே நாம் காண்கின்றவைகளிலிருந்து இங்கு கூறப்படும் நீத்தார் அதிகார, இயல் இவைகளின் இயைபுக்கேற்ப துறவியைக் குறிக்கிறது. ஆயினும் இத்துறவி ஒரு நிலைக்கு அஞ்சிப் பிறிதோர் நிலையை ஏற்கும் பொருட்டாக நீத்தாராவார். நிலைக்கு அஞ்சுவதினும் கொலைக்கு அஞ்சுதல் உயர்வு ; இந் நீத்தாரைக் காட்டிலும் கொல்லாமை சூழ்வான் தலைமையானவன் ; அதாவது உயர்ந்தவன் எனக் கூறுகிறுர் வள்ளுவர்.

முன்குறட்பாவில் ‘நீத்தார்’ சிறிது காலம் மனைவியை விட்டுப்பிரிந்த இல்வாழ்வானைக் குறித்தது.

இக்குறட்பாவில், கொலையஞ்சிக் கொல்லாமை சூழ்வானைவிடக் குறைவுபட்ட, நிலையஞ்சி நீத்தாராகிய துறவியைக் குறித்தது.

மூன்ருவது குறட்பாவை நோக்குவோம். இது பாயிரத்தின் பகுதியாம், நமது ஆய்வுக்குரிய நீத்தார் பெருமையின் முதற் குறட்பாவாகும். இக்குறட்பாவில் குறிக்கப்படும் பகுதி ‘ஒழுக்கத்து நீத்தார்’.

இதற்கு உரையாசிரியர்கள் கொள்ளும் பொருளை நோக்குவோம்.

| | |
|---|---|
| பரிமேலழகர் : | தமக்குரிய ஒழுக்கத்தின்கண்ணே நின்று துறந்தவர். |
| காலிங்கர் : | தாம் முன்பு ஒழுகிய ஒழுக்கத்தினைப் பின்பு துறவுநெறி செல்லுகின்ற ஒழுக்கத்தின் கண்ணே நின்று துறந்தவர். |
| மணக்குடவர் : | ஒழுக்கத்தின் பொருட்டு எல்லாப் பொருளையும் துறந்தவர். |
| பரிதியார் : | ஐம்புலன்களையும் அடக்கின ஒழுக்கத்தினோர். |
| தா. பா. பிள்ளை : | அருளோடுகூடிய அற ஒழுக்கத்தில் நின்று அவாவிற் றுறந்தார். |
| சாமிசிதம்பரனார் : | சிறந்த ஒழுக்கமுடன் வாழ்ந்து துறந்தவர். |
| மு. வரதராசனார் : | ஒழுக்கத்தில் நிலை நின்று பற்று விட்டவர். |
| ந. சி. க. பிள்ளை : | நல்லொழுக்கத்தில் ஒழுகிஉலகப் பற்று விட்டவர். |
| இராமலிங்கனார் : | ஒழுக்கம் தவறாமல் ஆசாபாசங்களை நீக்கி வாழ்ந்தவர். |
| இலக்குவனார் : | நல்லொழுக்கம் உடையவராய்த் தன்னலம் துறந்தார். |
| தே. நே. பாவாணர் : | தமக்குரிய ஒழுக்கத்தின்கண் உறைந்துநின்று உலகப்பற்றைத் துறந்த முனிவர். |

புலவர் குழந்தை: நல்லொழுக்கத்தில் நின்று தீய ஒழுக்கங்களைத் துறந்தவர்.

அப்பாத்துரையார்: அந்தண்மையாகிய இன ஒழுக்கத்தையே பேரளவில் துறந்து, அதனிடமாகச் சமுதாய ஒழுக்கத்தை ஏற்று அதில் நிற்பவர்.

இதுவரை நாம் கண்ட 1. நம் நீத்தார் 2. நிலை நீத்தார் 3. ஒழுக்கத்து நீத்தார் ஆகிய மூன்று இடங்களிலும் 'நீத்தார்' என்பது பிரிந்தவர் என்ற பொருளைத் தெளிவாக விளக்குகிறது. இன்பத்துப் பாலிலுள்ள 'நீத்தார்' என்பதற்குப்பொருள் கூறுங்கால், பிரிந்தவர் என்று மட்டுமே உரையாசிரியர்கள் உரை கூறினர். அங்கு 'நீத்தார்' என்பதற்குத் துறந்தவர் என்ற சொல்லை எவரும் கையாளவில்லை. துறவறவியலில் 'நிலையஞ்சி நீத்தார்' என்பதின் கண்ணுள்ள நீத்தார் என்பதற்கு, துறந்தார் என அதிகாரத்திற்கும், இயலுக்கும் ஏற்பப் பொருள் கொண்டனர். ஆனல் பாயிரமாகிய நீத்தார் பெருமையில் பொருள் கூறும் பொழுது உரையாசிரியர்கள் தடுமாற்றமடைவதை நாம் காணமுடிகிறது. ஏன்?

நம் நீத்தார் = நம்மை நீத்தவர்
நிலை நீத்தார் = நிலையை நீத்தவர்

எனஎளிதாகப் பொருள் கூறியவர்கள் ஒழுக்கத்து நீத்தார், என்றசொல்குறித்து நிற்கும்பொருள் என்ன என்பதை அறியமுடியாச் சூழலில் 'ஒழுக்கத்தின் கண்ணே நிலைநின்று நீத்தவர்' எனவும் 'ஒழுக்கத்தில் நின்று நீத்தவர்' எனவும், ஒழுக்கம் தவருமல் நீத்தவர், எனவும். 'ஒழுக்கம் உடையவராய் நீத்தவர்' எனவும், 'ஒழுக்கத்தின்பொருட்டு நீத்தவர்' எனவும், 'ஒழுக்கத்தையேநீத்தவர்' என

வுமாகப் பலரும் பலவிதமாகப் பொருள் கொண் டனர்.

ஒரு முக்கிய குறிப்பை இங்குநாம் நினைவுகூறல் வேண்டும். பாயிரத்திலுள்ள மூன்ரும் அதிகாரமா கிய நீத்தார் பெருமை என்னும் இவ்வதிகாரத்திற்கு இப் பெயர் கொடுக்கப்பட மூலகாரணமாய் இருப் பது இக்குறட்பா ஒன்று மட்டுமேயாகும். இக்குறட் பாவை நீக்கி அதிகாரத்தை நோக்கினுல், இவ்வதி காரத்திற்கு இப்பெயர் வரக்கூடுமா? என்ற ஐயம் தோன்றும்.

கடவுள் என்ற சொல்லே இல்லாத அதி காரத்திற்குக் கடவுள்வாழ்த்து என்றதலைப்பு வள்ளு வரால் இடப்பட்டிருக்கக் கூடுமா? என்று ஐயம் கொள்ளும் அறிஞர்களும், அவ்வதிகாரத்தின் ஒவ் வொரு குறட்பாவிலும், கடவுளின்தன்மையேவிளக் கப்படுவதால் ஐயத்தின் நீங்கித் தெளிகின்றனர். மற்ற அதிகாரங்களிலும், தலைப்புச் சொல்லும், பொருளும், அதிகாரம்முழுவதும் பரவிச்சூழ்ந்துள் ளன. எனவே அதிகாரத்தலைப்பிற்குக்காரணமான இக்குறட்பாவின் சொல்லாகிய 'ஒழுக்கத்துநீத்தார்' என்னும் இச் சொல்லை மேலும் ஆயவேண்டுவது அவசியமாகிறது.

'ஒழுக்கத்து நீத்தார்' என்பதில் ஒழுக்கத்திற்கும் நீத்தார்க்கும் உள்ள தொடர்பு என்ன? 'நீத்தார்' என்பது துறவியைமட்டுமே குறிக்கப் பயன்படுத்தப் பட்ட சொல்லன்று என்பதைக் கண்டோம். ஆகவே நீத்தார் என்னும் சொல்லால்மட்டும் எந்தச் சிறப்புப் பொருளையும் காணமுடியா தவர்களாகிரேம். ஆனல் ஏதோ ஒன்றைப்பிரிந் தவர் என்பதை மட்டுமே நாம் உணர முடிகிறது.

எதைப் பிரிந்தவர்? என்ற கேள்விக்கு விடை யளிக்கும் சொல்லாக நிற்பதே 'ஒழுக்கத்து' என்

னும் சொல்லாகும். இதிலுள்ள 'அத்து' என்பதை ஏழாம் வேற்றுமையாகவோ அல்லது சாரியையாகவோ கொண்டால், எஞ்சி நிற்பது 'ஒழுக்கம்' என்ற சொல்மட்டுமேயாகும். இச்சொல்லை இங்கு வள்ளுவர் ஏன்? என்ன பொருளில் ஆண்டுள்ளார்? என்பதை அறிந்தால் அதன் தொடர்பான 'நீத்தார்' என்பதற்கான சிறப்புப் பொருள் விளங்கிவிடும்.

'ஒழுக்கம்' என்ற இச்சொல் மட்டுமே பாயிரத்தின் நான்கு அதிகாரங்களையும் இணைக்கும் இணைப்புப்பாலமாக விளங்குகிறது. பாயிரத்திலுள்ள நான்கு அதிகாரங்களுக்கும் இடையேஇருக்கும்தொகுப்பை நாம் செவ்வனே அறிந்து கொள்ளுவதற்கு ஆணி வேராய் இருப்பதும் இச்சொல்லேயாகும்.

**கடவுள் வாழ்த்தினுள்**

*பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க*
*நெறிநின்ருர் நீடுவாழ்வார் —6*

என்ற குறட்பாவினுள் பொய்தீர்ஒழுக்கநெறியைக் காட்டியவன் ஐந்தவித்தானுகிய கடவுள் எனவும்,

**வான் சிறப்பினுள்**

*நீரின் றமையா துலகெனில் யார்யார்க்கும்*
*வானின் றமையா தொழுக்கு —20*

என்ற குறட்பாவின் வாயிலாக யார்யார்க்கும் ஒழுக்கு அமைவதற்குக் காரணம் வான் எனவும்

**நீத்தார் பெருமையினுள்**

*ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து*
*வேண்டும் பனுவல் துணிவு —21*

என்ற குறட்பாவின் வாயிலாக ஒழுக்கத்தோடு ஏதோ தொடர்பு கொண்டவர் நீத்தார் எனவும்

*இருமை வகைதெரிந்து ஈண்டு அறம்பூண்டார்*
*பெருமை பிறங்கிற்று உலகு. —23*

*அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்*
*செந்தண்மை பூண்டொழுக லான். —30*

என்னும் குறட்பாக்களால் ஒழுக்கத்து நீத்தார் இவ்வுலகில் அறம் பூண்டு ஒழுகிக் காட்டியதே அறம் எனவும், அவ்வறத்தை வலியுறுத்திக் காட்டுவதே அறன் வலியுறுத்தல் எனவும், விளங்குகிறது. இவ்வாறாக ஒழுக்கம் என்ற சொல் பாயிரத்தின் நான்கு அதிகாரங்களையும் இணைப்பதை நாம் பார்க்கிறோம். மேலே கண்டவைகளைச் சுருக்கினால் :

ஒழுக்க நெறியைக் காட்டியவன் — கடவுள்
ஒழுக்கத்தில் நிலைநிறுத்துவது — வான்
ஒழுக்கத்தோடு ஏதோ தொடர்பு
கொண்டவன் —நீத்தார்

நீத்தாராகிய அந்தணர் ஒழுகிக் காட்டியதே—அறம்

அறம், நூல் முழுவதிலும் விரித்துரைக்கப் படுகிறது. இங்கு கூறப்படும் இந்த அறமும், அறத்தைக் காட்டியவரும், ஒழுக்கத்தோடு ஏதோ தொடர்பு கொண்ட நீத்தார், வான், கடவுள் ஆகிய நான்கும் பாயிரத்தில் பகரப்படுகின்றன. அதாவது அறம் வலியுறுத்தப்படுகிறது. வான் சிறப்பிக்கப்படுகிறது. கடவுள் வாழ்த்தப்படுகிறார்.

பாயிரத்தில் கூறப்படும் இந்நான்கு அதிகாரங்களுள் கடவுள் வாழ்த்து நீத்தார் பெருமை ஆகிய இரண்டு அதிகாரங்கள் மட்டுமே ஆதிபகவன், ஓரைந்துங்காப்பான் போன்ற, உயர்திணை ஆண்பால் ஒருமை விகுதியுடன் இணைத்துக் கூறப்படுகின்றன. மற்ற இரண்டும் அவ்வாறு கூறப்படவில்லை.

கடவுளைப் பற்றிய கருத்து விளங்குகிறது. கடவுளோடு இணைக்கப்பட்டுள்ள நீத்தார் யார்? அவர் மனிதரா? சாதாரண மனிதராக இருக்க முடியுமா? நூலுள் மற்ற இடத்திலல்ல. பாயிரத்தினுள் அதிலும் உயர்திணை ஆண்பால் ஒருமையில் கடவுளுடன் இணைந்த நிலையில் குறிக்கப்படுகின்றமையால் சாதாரண மனிதராக இருக்கமுடியாது. அப்படியானால் இங்கு குறிக்கப்படும் நீத்தார் துறவியா? என்பதை நோக்குவோம்.

## 3. நீத்தார் துறவியா?

நீத்தார் என்னும் சொல்லும், பிரிந்தவர் என்னும் சொல்லும் ஒரே பொருளையே குறிப்பவை. நீத்தார் பெருமை என்னும் இவ்வதிகாரத்திலேயே, நீத்தார் என்னும் சொல்லுக்குப் பதிலாகத் துறந்தார் என்னும் சொல்லையும் வள்ளுவர் ஆண்டுள்ளார்.

*துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து*
*இறந்தாரை எண்ணிக்கொண் டற்று —22*

ஆகவே நீத்தார் எனினும் துறந்தார் எனினும் பொருள் ஒன்றே. துறந்தார் என்பது பொதுவாகத் துறவறத்தை மேற்கொண்ட துறவிகளைக் குறிக்கப் பயன்படும் சொல்லாகும். துறந்தார் என்னும் சொல்லை நீத்தாருக்குப் பதிலாக வள்ளுவர் இவ்வதிகாரத்திலேயே ஆண்டுள்ளமையால் நீத்தார் பெருமை என்னும் இவ்வதிகாரம் துறவிகளின் பெருமையைக் கூறுகிறது எனக்கொள்ளலாமா? உரையாசிரியர்களுள் பெரும்பாலோர் இது துறவிகளைப் பெருமைப்படுத்தும் அதிகாரம் எனவே கொண்டனர். இது பொருந்துமா? என ஆய வேண்டியது அவசியமாகும்.

துறவி என்பது இல்லறத்தைத் துறந்து துற வறத்தை மேற் கொண்டவர்களையே குறிக்கும். நீத்தார் பெருமையில் திருவள்ளுவர் இல்லறத்தைத் துறந்து துறவறத்தை மேற்கொண்ட துறவிகளையே சிறப்பித்துள்ளாரா? அதாவது இல்லறத்தாரைவிட துறவறத்தாரே உயர்ந்தவர்; கடவுளுடன் வைத் தெண்ணும் தகுதி துறவறத்தார்க்கேயுண்டு; அந்த அளவு தகுதி இல்லறத்தார்க்குக் கிடையாது; என வெளிப்படுத்தியுள்ளாரா? என்பன சிந்திக்கத் தக்கவை.

இல்லறம், துறவறம் ஆகிய இரு அறங்களுள், துறவறத்தைப் பெருமைப்படுத்துவது சாதாரண மாகப் பரவலாகக் காணும் இயல்பு. காரணம் அது கைக் கொள்ளக் கடினமான வலிந்த முயற்சி. இல்லறம் இயல்பானது. யாவரும் இயல்பாகக் கைக் கொள்ளுவது; துறவறத்தைப் போன்று கடின முயற்சி தேவை இல்லாதது. ஆகவே கைக் கொள்ளக் கடினமான துறவறம் உயர்த்திப் பேசப் படுவது இயல்பு.

ஆனால் உயர்ந்தவர்களின் நிலை சாதாரண நிலையினின்று சற்று மாறுபட்டதாகும். இல்லறம் துறவறம் ஆகிய இரு வழிகளிலும் செல்பவர்களுக்கு அவர்களின் வழிகளுக்காகச் சிறப்புக்கொடாது, அவர்கள் பெற்ற வெற்றிக்காகச் சிறப்புக் கொடுப்பதே உயர்ந்தவர் நிலையாகும். இங்கு வழி சிறப்படையாமல் பெற்ற வெற்றியே சிறப்பிக்கப் படுகிறது. வெற்றி பெற்றவர்களில் ஒரு வழியைப் பின்பற்றியவர்கள் மட்டுமே உண்டு என்ற நிலை இல்லை. இந்நிலையில் இல்லறம், துறவறம் ஆகிய இரு வழிகளுமே சமமாகக் கருதப்படுகின்றன.

இப்போது வள்ளுவர் கொள்கையைப் பார்ப் போம். அவர் துறவறத்தையே உயர்த்திக் கூறு

கின்ருரா? அல்லது இரு அறங்களையும் சமமாகக் கருதுகின்ருரா? அல்லது இல்லறத்தைச் சிறப்பித்துக் கூறுகின்ருரா? என்பன நோக்கவேண்டியவையாகும்.

வள்ளுவப் பெருந்தகை பாயிரம் பாடிய பின்னர் அறத்தை இல்லறவியல், துறவறவியல் என இரு கூராக்கி, துறவறமே முதன்மையானது, சிறப்புப் பெறுவது, என எண்ணியிருப்பாராஞல் அதையே முதலிலும், இல்லறத்தை இரண்டாவதுமாகக் கூறியிருக்க வேண்டும். ஆனல் வள்ளுவர் அவ்வாறு துறவற இயலுக்கு முதன்மையிடம் கொடாது இல்லறத்திற்கே முதன்மையிடம் கொடுத்திருப்பதுடன், அறம் என்ற சொல் குறிப்பது, இல்லறத்தையே, துறவறத்தையன்று என ஆணித்தரமாக:

*'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை'* — *49*

எனவும் கூறியுள்ளார். பாயிரம் முடிந்தவுடன் பாயிரத்திற்கு அடுத்த சிறப்பை வள்ளுவர் இல்வாழ்க்கைக்கே கொடுத்துள்ளார். அத்துடன்

*இயல்பினல் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்*
*முயல் வாருள் எல்லாம் தலை* —*47*

என்ற குறட்பாவின் மூலம் துறவறத்தானினும், இல்லறத்தானே தலைமையானவன் எனக்கூறும் வள்ளுவர் பாயிரத்தில் துறவியையே சிறப்பித்துள்ளார் என்பது எங்ஙனம் பொருந்தும்? 'நீத்தார்' என்னும் சொல் துறவியை மட்டுமே குறிப்பதல்ல; 'பிரிந்தவர்' என்ற பொருளைக் குறிப்பதற்கே பயன்படுத்தப்பட்டுள்ளது எனப் பார்த்தோம். அவ்வாறே 'துறந்தார்' என நீத்தார் பெருமையில் வள்ளுவர் ஆளும் சொல்லும் இல்லறத்தைத் துறந்த துறவியை மட்டுமே குறிக்கும் சொல் அன்று என்

பதையும் வள்ளுவர் வாக்காலேயே விளங்கிக் கொள்ளுகிறோம்.

இன்பத்துப்பாலின் கற்பியலில், பசப்புறு பருவரல், என்னும் அதிகாரத்தின்கீழ்

*பசந்தாள் இவள் என்பது அல்லால் இவளைத்*
*துறந்தார் அவர் என்பார் இல்—1188*

துறந்தார் என்னும் சொல் துறவியைக் குறியாது மனைவியைச் சிறிதுகாலம் பிரிந்த இல்லறத்தானைச் சுட்டி நிற்பது நோக்கத்தக்கது.

ஆகவே நீத்தார் பெருமையின் கீழ் வள்ளுவர் ஆளும், 'நீத்தார்' 'துறந்தார்' என்னும் சொற்கள், துறவறத்தை மேற்கொண்ட துறவியைமட்டுமே குறியாததுடன், இல்லறத்தானையும் குறிக்கும்படியாக வள்ளுவர் செய்யுள் செய்திருப்பது எண்ணி வியக்கத்தக்கதொன்றேயாகும். இவ்விரண்டு சொற்களையும் வள்ளுவர் இன்பத்துப் பாலில் ஆளாமல் இருந்திருந்தால், ஐயம் தோன்ற ஏதுவாகும் என எண்ணியே இன்பத்துப்பாலில் ஆண்டுள்ளார் என வியக்க வேண்டியுள்ளது.

திருக்குறளைப் பின்பற்றி வெளிவந்த நாலடியாரில், துறவறமே சிறப்பிக்கப்பட்டு முதன்மையாகக் கூறப்பட்டிருப்பதோடு, இல்லறம்முறையாகக் கூறப்படாமல், துறவறத்தை விடக் குறைந்ததாகவும் காட்டப்படுகிறது. அது நாலடியார் இயற்றிய ஆசிரியரின் கருத்து.

ஆனல் வள்ளுவர் கருத்தோ அதற்கு முற்றிலும் மாறுபட்டதென்பது வெள்ளிடைமலையாகும். ஆகவே வள்ளுவர் பெருமைப்படுத்தும் நீத்தார் துறவறத்தை மேற்கொண்ட துறவிகளைக் குறிப்பதன்று என்பது தெளிவாகிறது.

துறவிகளைக் குறிக்கவில்லை யெனில் இல்லறத்தாரைக் குறிக்கிறதா? என்ற கேள்வியும் எழலாம். இல்லறத்தாரையே குறிப்பது என்பதற்கு நீத்தார் பெருமையில் எவ்வித ஆதாரமும்இல்லை. ஆகவே 'நீத்தார்' என வள்ளுவரால் இங்கே குறிக்கப் படுபவர், இல்லறம், துறவறம் ஆகிய இரண்டிற்கும் அப்பாற்பட்டவர் அதாவது மேலானவர் என்பதும் அவர் கடவுளுடன்; இணைந்தவர் எனவும் கொள்ள வேண்டியதாகிறது.

அப்படியானால் நீத்தார் என்பதன்மூலம் வள்ளுவர் குறிப்பிடுவது ஒருவரையா? பலரையா? என்ற கேள்வி எழுகிறது. ஏனெனில் கடவுள் ஒருவரே என்பதில் வள்ளுவர்க்கு எவ்வித ஐயமும் இல்லை என்பது, அவரது கடவுள் வாழ்த்தாலேயே விளங்குகிறது. அந்த ஒரேகடவுளுடன் இணைந்த, மனிதர் யாவரினும் மேலான ஒழுக்கத்து நீத்தார் ஒருவரா? பலரா? என்பதைக் காண ''நீத்தார்'' ஒருமையா பன்மையா? என்பதைக் காணுவது அவசியமாகும்.

## 4. 'நீத்தார்' ஒருமையா பன்மையா?

வள்ளுவப் பெருந்தகையால் கடவுள்வாழ்த்தில் வாழ்த்தப்படும் கடவுள் ஒருமையா? பன்மையா? என்ற கேள்விக்கு இடமில்லை. ஏன்?

கடவுளை 'ன்' என்னும் ஆண்பால் ஒருமை விகுதியால் சுட்டி அழைத்திருப்பதால், வள்ளுவர் வாழ்த்தும் கடவுள் ஒருவனே; ஆகவே வள்ளுவர் பல தெய்வ வணக்கக் கொள்கையுடையவர் அல்லர் என்பது தெளிவு. அவர் கடவுளை வாழ்த்திக்கூறிய பெயர்கள் :

1. ஆதிபகவன்
2. வாலறிவன்.
3. மலர்மிசைஏகினன்.
4. வேண்டுதல் வேண்டாமையிலான்.
5. இறைவன்.
6. ஐந்தவித்தான்.
7. தனக்குவமையில்லாதான்.
8. அறவாழி அந்தணன்.
9. எண்குணத்தான்.
10. இறைவன்.

பத்துக்குறட்பாக்களிலும்வள்ளுவர் கடவுளுக்கு 'ன்' என்னும் ஆண்பால் ஒருமை விகுதியையே கூறியுள்ளார். ஆகவே ஐயம் இல்லை.

ஆனல் பாயிரத்துள் கடவுள் வாழ்த்துடன் இணைந்த நீத்தார் பெருமையில் ஒருமை விகுதியை யும் பன்மை விகுதியையும் கலந்து பயன் படுத்தி யுள்ளார்

**பன்மைவிகுதிகள்**

1. ஒழுக்கத்துநீத்தார்.
2. துறந்தார்.
3. அறம்பூண்டார்.
4. செயற்கரியசெய்வார்.
5. நிறைமொழி மாந்தர்.
6. குன்றேறிநின்ருர்.
7. அந்தணர்.

**ஒருமைவிகுதிகள்.**

1. ஓரைந்துங் காப்பான்.
2. ஐந்தவித்தான்.
3. ஐந்தின்வகை தெரிவான்.

ஏன் வள்ளுவர் இங்குஇவ்வாறு ஒருமை விகுதியையும் பன்மை விகுதியையும் கலக்கவேண்டும்? நீத்தார் ஒருவரா? பலரா?

நீத்தார் ஒருவரையே குறிக்குமானுல், ஏழுஇடங்களிலும் அதிகாரத் தலைப்பிலும் வள்ளுவர் பலர்பால் விகுதியைப் பயன் படுத்தியது ஏன்? 'நீத்தார்' என்பது, பலரையே குறிப்பதாஞல் உள்ளேயுள்ள மூன்று குறட்பாக்களில் ஒருமை விகுதியைப் பயன் படுத்தியது ஏன்? அதிலும் சிறப்பாக முதலதிகாரத்தில் கடவுளையேகுறிக்கப் பயன் படுத்திய 'ஐந்தவித்தான்' என்னும் சொல்லை இங்கும் பயன் படுத்தியதுஏன்?

*ன:கான் ஒற்றே ஆடூஉ அறிசொல்*
*தொல் —488*

*ர:கான் ஒற்றும் பகர இறுதியும்*
*மாரைக்கிளவி உளப்பட மூன்றும்*
*நேரத் தோன்றும் பலரறி சொல்லே*
*தொல் 490*

மேலே கண்ட தொல்காப்பிய விதிகளுக்கிணங்க ர்ஃகான் ஒற்று பலரறி சொல்லேயாகும்.

நீத்தார், அதிகாரத் தலைப்பில் பன்மை விகுதியிருப்பதால், அதைக்குறித்துச்சொல்லும்ஒவ்வொரு பெயரிலும், பன்மைவிகுதியே குறிக்கப்பட்டிருத்தல் அவசியம். அதுவே முறையுமாகும். ஆனுல் திருவள்ளுவர் அக்கொள்கையிலிருந்து மாறிக்கூறியிருப்பதைநாம் காணுகிறேம். அவர் அவ்வாறு கூறக்காரணம்என்ன?

*பழையன கழிதலும் புதியன புகுதலும்*
*வழுவல கால வகையினுனே*
*ந.சூ. ... 462*

என்ற நூற்பாவுக்கேற்ப திருவள்ளுவர் தொல்காப்பியப் பழைய மரபைக் கழித்துப் புதிய மரபைத்

தன் நூலுள் ஆண்டுள்ளாரா? என்பது நோக்கத் தக்கது.

தொல்காப்பியத்திற்குப் பிற்பட்ட இலக்கியமே திருக்குறள் என்பது அறிஞர் பெருமக்கள் ஒப்புக் கொண்ட உண்மையாகும். தொல்காப்பியமாகிய இலக்கணம் அதற்கு முந்திய இலக்கியத்தின் சாரமேயாகும். ஆகவே அவ்விலக்கணம் அதற்குப் பிந்திய இலக்கியங்களை முழுவதும் கட்டுப்படுத்த முடியாது. இலக்கணம் மொழியின் சட்டம் இலக்கியம் மொழியின் வாழ்க்கை. வாழ்க்கைக்காகச் சட்டமேயொழிய சட்டத்திற்காக வாழ்க்கையன்று. ஆகவேதான் :

'இலக்கியம் கண்டதற் கிலக்கணம் இயம்பலின்'

நா. சூ. 141

என்றார் இலக்கண ஆசிரியர் பவணந்திமுனிவர். எனவே, வள்ளுவரின்வழி தொல்காப்பியத்திற்கு மாறானதாக இருக்குமாயின், வள்ளுவர்க்குப் பிந்திய இலக்கண நூலின் துணைகொண்டு வள்ளுவரின் உள்ளத்தை அறிய வேண்டும். அவ்வாறு நோக்குங்கால் தொல்காப்பியத்திற்குப் பின்னருள்ள இலக்கண நூல்களுள் தலைசிறந்ததாகக் கருதப்படுவது பவணந்தி முனிவரால் இயற்றப்பட்ட நன்னூலே யாகும். இதனுடனும்ஒப்பிட்டுத்திருக்குறளைநோக்கு வோம்.

ஆண்பால் ஒருமையைக் குறிக்கும் விகுதி தொல்காப்பியத்தின்படி 'ன்' ஒன்று மட்டுமேயாகும் ஆனால் நன்னூலுள் மேலும் ஒருபடி கூறப்படுகிறது.

ஒருவன் — ஆண்பால்
ஒருத்தி — பெண்பால்

இவையிரண்டினைத்தவிர 'ஒருவர்' என்றபுதிய சொல்லுக்கு இலக்கணம் வகிக்கிறது நன்னூல்.

*'ஒருவர் என்ப துயரிரு பாற்றுப்*
*பன்மை வினைகொளும் பாங்கிற்றென்ப'* ந. சூ. 289

அதாவது 'ஒரு' என்ற ஒருமைப் பகுதி 'அர்' என்ற பன்மை விகுதியைப்பெறலாம்; 'அர்' என்னும் விகுதி பன்மைக்கு மட்டுமே வருவதன்று. ஒருமைக்கும் வரலாம், என நன்னூல் கூறுகிறது.

பன்மைக்குரிய ஈறு ஒருமைக்கும் வருமானல் பன்மையை மட்டும் குறிக்கும் இடங்களில், ஒருமையா? பன்மையா? என்ற மயக்கந் தோன்றுமல்லவா? எனவே அம்மயக்கத்தை நீக்க மேலும் ஒரு விகுதி புதிதாகப் புகுத்தப்பட்டது.

*கிளந்த கிளைமுதல் உற்றரவ் வீற்றவும்*
*கள்ளென ஈற்றின் ஏற்பவும் பிறவும்*
*பல்லோர் பெயரின் பகுதி ஆகும்.*

ந.சூ. உஎஅ.

[ *விருத்தி : தமர்கள், நமர்கள், அரசர்கள், மறவர்கள் என்றற்றொடக்கத்தன விகுதிமேல் விகுதியீற்றுப் பெயர்கள்.* ]

ஆகவே, தொல்காப்பியர் காலத்தில் இல்லாத 'கள்' விகுதி, அதாவது விகுதிமேல் விகுதி, தொல்காப்பியத்திற்குப் பின்னர் எழுந்த இலக்கியங்களில் தோன்றிற்று. இவ்விலக்கியங்களில் தோன்றியவற்றின் சாரம் இலக்கணமாகிய நன்னூலுள் இறங்கிற்று. இந்நோக்குடன் இப்பொழுது திருக்குறளை நோக்குவோம்.

'நீத்தார்' என்பதிலுள்ள 'ர்' விகுதி உயர்வைக் கொடுக்கும் ஆண்பால் ஒருமை விகுதியாகக் கொள்ளப்பட்டால், பின்னர் அவர் அதிகாரத்தினுள் குறிக்கும் 'ன்' என்னும் ஆண்

யால் ஒருமை விகுதியுடன் வேற்றுமையின்றி இணைந்து 'நீத்தார்' என்பது ஒருமையையே சுட்டும் பெயராகி ஐயத்தை நீக்குகிறது.

இக்கொள்கை உறுதிப்பட வேண்டுமானுல் வள்ளுவர் இங்கு உயர்திணை ஆண்பால் ஒருமையைப் பன்மை விகுதியால் குறித்திருப்பதைப் போன்று வேறு இடங்களிலும் குறித்துள்ளாரா? என நோக்க வேண்டும். அவ்வாறு நோக்குங்கால்

நெருநற்றுச் சென்ருரெங்காதலர் யாமு
மெழுநாளே மேனிபசந்து —127

பசந்தாள் இவள் என்பது அல்லால் இவளைத்
துறந்தார் அவர் என்பார் இல் —1188

இக்குறட்பாக்களுள் ஒரே தலைவனைக் குறித்துக் கூறும் சொற்களில், காதலர், சென்ருர், துறந்தார் எனப் பன்மை விகுதியிட்டுக் கூறுகிருர் வள்ளுவர். இங்கு காதலர், சென்ருர், துறந்தார் என்பன ஒருமையே யன்றிப் பன்மையல்ல.

ஒருமைக்கு 'ர்' விகுதி வந்தமையால், பன்மைக்கு விகுதிமேல் விகுதி பெற்ற பெயர் திருக்குறளில் வந்திருத்தல் வேண்டும். அவ்வாறு வந்துள்ளதா என நோக்குங்கால் :

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றையவர்கள் தவம்.

என்ற குறட்பாவில் 'மற்றையவர்கள்' என விகுதிமேல் விகுதிபெற்ற பெயர் வந்துள்ளது. எனவே, தொல்காப்பியத்திற்குப் பின்னரும், நன்னூல் இலக்கணத்திற்கு இலக்கியமாகவும் இவ்வகையில் திருக்குறள் விளங்குகிறது என்பதை நாம் அறிகிரும்.

'நீத்தார்' என்பது ஒருமையா? பன்மையா? என்ற ஐயத்திற்கு இடமான, ஒருமை விகுதியும் பன்மை விகுதியும் கலந்து காணப்பட்டபோதிலும், இலக்கணமாகிய மொழியின் சட்டத்திற்கு முன்னர் எவ்வித மயக்கத்திற்கோ ஐயத்திற்கோ இடமின்றி ஒருமையே என்ற தீர்ப்பைப் பெற்று விடுகிறது. ஆக்வே, நீத்தார் என்பதை ஒருமை எனவே கொண்டு இனி நம் ஆய்வை மேலே தொடர்வோம்.

'நீத்தார்' என்பது ஒருமையாஞல் அதாவது ஒருவரையே குறிக்குமாஞல் அந்த ஒருவர் யார்? வள்ளுவர்க்குப் பலதெய்வ வணக்கம் உடன் பாடன்று. ஒரே தெய்வ வணக்கமுடையவர் என்பதை முன்பு நாம் கண்டோம்.

பாயிரத்தின் நான்கு அதிகாரங்களுள் உயர் திணை ஆண்பால் ஒருமைப் பண்போடு குறிக்கப் படுபவை கடவுள் வாழ்த்து, நீத்தார் பெருமை ஆகிய இரண்டு அதிகாரங்கள் மட்டுமேயாகும். ஒரே கடவுளை, கடவுள் வாழ்த்தில் காணுகிறேம். கடவுளோடு இணைத்துப் பாயிரத்தில் வள்ளுவரால் பெருமைப்படுத்தப்படும் ஆள்தன்மை பொருந் திய ஒருவராகிய நீத்தார் யார்? 'நீத்தார்' என்பது இல்லறத்தானையோ அல்லது துறவியையோ குறித்ததல்ல என்பதைக் கண்டோம். இல்லறத்தானுமல்ல, துறவியுமல்ல எனக்கூறும் பொழுது மனிதன் அல்லன் என்ற நிலை ஏற்பட்டுவிடுகிறது. மனிதன் அல்லன் என் ருல் ஆண்பால் ஒருமை விகுதியால் சுட்டப்படும் கடவுளோடு இணைத்துப் பாயிரத்தினுள் வள்ளு வரால் பெருமைப்படுத்தப்படும், 'நீத்தார்' என்பதும் கடவுளையே குறிக்கிறதா? என்ற கேள்வி எழுகின்றது. எனவே நீத்தாருக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்பை வள்ளுவர் வழியில் நின்று

ஆய்ந்து 'நீத்தார்' என்பது இங்கு கடவுளையே குறிக்கிறதா என நோக்கவேண்டுவது அவசிய மாகும். நீத்தார் கடவுளா? என்ற வினவுக்கு விடைகாண முயலுவோம்.

## 5. நீத்தார் கடவுளா?

நீத்தாரும் கடவுளும் ஒன்றே என நாம் கொள்ளுவதற்கு வேண்டிய குறிப்புகள் கடவுள் வாழ்த்து, நீத்தார் பெருமை ஆகிய இரண்டு அதிகாரங்களிலும் உண்டு. எவ்வாறு? கடவுள் வாழ்த்தினுள், திருவள்ளுவர் கடவுளுக்குச் சூட்டிய பெயர்களுள் ஒன்று 'ஐந்தவித்தான்' என்பது

*பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க*
*நெறிநின்றார் நீடுவாழ் வார்* ...6

இதே பெயரை மீண்டும் வள்ளுவர் நீத்தாருக்கும் சூட்டுகின்றார்.

*ஐந்தவித்தானாற்றல் அகல்விசும்புளார்கோமான்*
*இந்திரனே சாலுங் கரி.* ...25

நூலுள் வேறு எங்கும் 'ஐந்தவித்தான்' என்ற பெயர் வள்ளுவரால் குறிக்கப்படவில்லை. ஆகவே, 'ஐந்தவித்தான்' என்ற நிலையில் கடவுளும் நீத்தாரும் ஒன்று என்றாகிறது.

அடுத்து கடவுள் வாழ்த்தினுள் கடவுளுக்கு இடப்பட்டுள்ள பெயர்களுள் மற்றொன்று, 'அந்தணன்' என்பது

*அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லால்*
*பிறவாழி நீந்தலரிது.* 8

இதே ‘அந்தணன்’ என்ற பெயரைச் சிறப்பு விகுதியாகிய ‘ர்’ சேர்த்து ‘அந்தணர்’ என நீத்தார் பெருமையில் அழைக்கிறார் வள்ளுவர்.

அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான் —30

இரண்டிடத்தும் அந்தணனை அறத்துடன் இணைத்தே சொல்லுகின்றார். ஆகவே ‘அந்தணன்’ என்ற நிலையிலும், கடவுளும் நீத்தாரும் ஒன்றே என்றாகிறது.

‘ஐந்தவித்தான்’ ‘அந்தணன்’ ஆகிய இரு சொற்களாலும் வள்ளுவர் கடவுளையும் நீத்தாரையும் இணைத்தது ஏன்? கடவுளும் நீத்தாரும் ஒருவரா?

வள்ளுவர் வாழ்த்தும் கடவுள் ஒருமை. நீத்தாரும் ஒருமையே என்பதைப் பார்த்தோம். ஆகவே, தனித்தனியாக இரு இடங்களிலும் சுட்டப் படும், இரு ஒருமைகளும் ஒருவனையே குறிக் கின்றனவா? ஒருவனையே குறிப்பதாக இருந்தால் தனித்தனியான இரு அதிகாரங்கள் ஏன்? கடவுள் வேறு, நீத்தார் வேறு என்ற நிலையை விளக்கும் முகத்தான் அதிகாரத் தலைப்புகளும் அமைந் துள்ளனவே? ஏன்? ‘கடவுள்’ என்ற பெயரால் எல்லாவற்றையும் கடந்த மெய்ப் பொருளாம் இறைவனைச் சுட்டும் வள்ளுவர், நீத்தார் என்ற பெயரால், எதை நீத்தார்? ஏன் நீத்தார்? என்ற வினாவுக்கு இடமளிக்கிறாரல்லவா? ஆகவே ‘ஐந்தவித்தான்’ அந்தணன் என்ற நிலையில் கடவுளும் நீத்தாரும் ஒன்றே எனவும், மற்ற நிலைகளில் கடவுளுக்கும் நீத்தாருக்கும் வேற்றுமை உண்டு எனவும் வள்ளுவர் விளக்குகின்றாரா? அதாவது கடவுளும் நீத்தாரும் ஒருவரே,

ஆனாலும் கடவுள் வேறு, நீத்தார் வேறு என்ற விளக்கத்தை வள்ளுவர் கொடுக்கின்றாரா?

இதைத் தெளிவாகச் சொன்னால் 'நீத்தார்' என்பது பிரிந்தார் என்ற பொருளைக்கொடுப்பதால் 1. கடவுள் நிலை 2. கடவுளே அதைப்பிரிந்த நிலை ஆகிய இருநிலைகளை வள்ளுவர் கூறுகிறாரா?

இதை ஒரு உவமை மூலமாக விளக்கினால்:— அரசன் ஒருவன் தன் நாட்டைக் கண்காணிக்கும் பொருட்டுத் துறவி வேடம் பூண்டு நாட்டைச் சுற்றி வருகிறான் எனவைத்துக் கொள்ளுவோம். துறவியைக் காணும் யாரும் அவன் அரசன் என எண்ணமுடியாது. இந்நிலையில் அரசன் வேறு துறவி வேறு. ஆனால் இரண்டு மனிதர்கள் அல்லர். மனிதன் ஒருவனே. அவன் கொண்ட நிலைமேலும் ஒன்று, அரசநிலையுடன் துறவிவேடமும் இணைகிறது.

அவனுக்குத் துறவி வேடம் தேவைப்பட்ட நேரத்தில் அரசன் என்ற நிலையிலிருந்து பிரிந்து, அதாவது அரச பெருமையை நீத்துத்துறவி வேடத்தை, அவசியத்தின் பொருட்டு ஏற்றுக்கொண்டான். அரசனும் துறவியும் ஒருவனே. ஆனால் வெளித் தோற்றத்திலும் செயல் முறையிலும் அரசன் வேறு துறவி வேறு.

அவ்வாறே கடவுளும் நீத்தாரும் ஒருவரே, ஆனாலும், அரசன் வேறு, துறவி வேறு என்பதைப் போன்று, கடவுள் வேறு, நீத்தார் வேறு என்ற நிலை வள்ளுவரால் விளக்கப்படுகிறதா?

இதைக்காண, அரசனுக்கும், துறவிக்கும் வேற்றுமையைக் காட்டுபவைகளை நீக்கி, ஒற்றுமையைக் காட்டக்கூடியவைகளை மட்டும் நோக்கி

உண்மையைக் காணுவதைப் போன்று, கடவுளுக்கும் நீத்தாருக்கும் உள்ள ஒற்றுமை நிலைகளை மட்டும் ஆய்வோம்.

ஒற்றுமை நிலையில் இருப்பவை நாம் முன்பு கண்டதைப் போன்று, ஐந்தவித்தான், அந்தணன் ஆகிய இருநிலைகளாகும். இவ்விரண்டையும் இப்போது விளக்கமாகக் காணுவோம்.

வள்ளுவர் எவ்லாவற்றையும் கடந்து நிற்கும் மெய்ப்பொருளாம் கடவுளை, அருவ நிலையில் விளக்கிக்கொண்டே வந்தவர் ஐந்தவித்தான் என்ற பெயரால் சுட்டுகின்றார். இதிலுள்ள 'ஐந்து' என்பது மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களேஎன்பதில் கருத்துவேறுபாடுகொள்ளுபவர் ஒருவருமில்லை எல்லாவற்றையும் கடந்து விளங்கும் அருவமான கடவுள், ஐம்புலனாகிய உருவத்துடன் விளங்குவது எவ்வாறு? ஐந்தவித்தான், என்னும் பெயரிலேயே அருவமான கடவுள், அவ்வருவத் தன்மையை நீத்து உருவமானான் என்பது விளங்குகிறது. அருவத் தன்மையை நீத்தவன் ஆகவே நீத்தாராகிறார். எனவே கடவுள் வாழ்த்திலேயே நீத்தார் தன்மை விளக்கப்படுகிறது. எதை நீத்தார் என்பதும் சுட்டப்படுகிறது. எல்லாவற்றையும் கடந்து நிற்கும் அருவத்தை நீத்தார். கடவுள் என்ற உயர் பெருமையை நீத்தார். அவர் அருவத்தை நீத்து ஐம்புலனாகிய உருவத்தை ஏற்றது ஏன்? அதாவது ஏன் நீத்தார்? அதற்கும் விடையைக் கடவுள் வாழ்த்துச் செய்யுளே கொடுக்கிறது. அவன் நீத்தமைக்கான காரணம் இரண்டு.

ஒன்று: ஐந்து + வித்தான். அதாவது, அவிப்பதற்காக ஐம்புலனை ஏற்றான்.

இரண்டு: பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் நீடு வாழ்வார். அதாவது மக்களுக்கு நீடுவாழ்வை

யளிக்கும் பொருட்டாக, அவர்களுக்குப் பொய்தீர் ஒழுக்க நெறியைக் காட்டுவதற்கு அருவத்தை நீத்து உருவத்தை ஏற்றான். உருவமாய் விளங்கும் மனிதர்களுக்கு ஒழுக்க நெறியைக் காட்டுவதற்கு உருவமாய் வந்தால்தான் முடியும். ஆகவே உருவமானான்.

மனிதன் எறும்புகளுக்குப் போதிக்க விரும்பினால், தானும் ஒரு எறும்பாக மாறித்தான் போதிக்க முடியும். அவ்வாறே ஐம்புலனுடைய மனிதர்களுக்குப் பொய்தீர் ஒழுக்க நெறியைக் காட்ட விரும்பிய கடவுள் அருவத்தை நீத்தார்; ஐம்புலனுடைய உருவத்தை ஏற்றார். ஆகவே, கடவுள் நீத்தாரானார். பொய்தீர் ஒழுக்கத்தைப்புகட்டும்படியாக அருவத்தை நீத்தார். ஆகவே ஒழுக்கத்து நீத்தாராகிறார். கடவுளின் நீத்தல் நிலைக்கும் ஒழுக்கத்திற்கும் அவ்வளவு நெருங்கிய தொடர்புண்டு.

உலகில் கடவுள் இல்லாமல் ஒழுக்கம் நிலை பெற முடியாது.

உலகில் மக்கள் நீடுவாழ்வை அடைவதற்கான ஒரு நெறியுண்டு. அதுவே பொய்தீர் ஒழுக்க நெறி. அவ்வொழுக்க நெறியைக் காட்டியவனே ஒழுக்கத்து நீத்தார். அவ்வொழுக்கத்து நீத்தாராகிய ஐந்தவித்தானே கடவுள்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்கநெறி—6

ஒழுக்கத்து நீத்தார் பெருமை —21

பொய்தீர் ஒழுக்க நெறியே அறம். அவ்வறத்தின் உருவமானவனே அறவாழி அந்தணனும் கடவுள். அவ்வந்தணனாகிய அறவோனும் நீத்தார் செந்தண்மை பூண்டொழுகிக்காட்டியதே அறம்.

அவ்வறத்தை வலியுறுத்திக் கூறுதலே அறன் வலி யுறுத்தல். அவ்வறத்தை விளக்கிக்காட்டுவதே திருக்குறளாம் அறத்தின் துணிபு.

'அறம் பாடிற்றே ஆயிழை கணவ' (புறம்)

ஆகவே அறம் ஒழுக்கம் என்ற சொற்களால் கடவுள் வாழ்த்தையும் நீத்தார் பெருமையையும் இணைக்கிறார் வள்ளுவர்; அறத்தாலும், ஒழுக்கத் தாலும் கடவுளும் நீத்தாரும் ஒன்றே என்கிறது.

அடுத்து பொறிவாயில் ஐந்தவித்தலாலும், ஐந்தவித்த ஆற்றலாலும் கடவுளும் நீத்தாரும் ஒன்றே என்பதை:

*பொறிவாயில் ஐந்தவித்தான்—6*
*ஐந்தவித்தான் ஆற்றல—25*

ஆகியவை நமக்கு விளக்குகின்றன.

இதுவரை நாம் கண்டவைகளில் இருந்து கடவுளும் நீத்தாரும் ஒருவரே என்பதை அறிந் தோம். கடவுளும் நீத்தாரும் ஒருவரானால் ஒரே அதிகாரத்தில் இதை விளக்காமல் இரண்டு அதிகா ரங்களால் வள்ளுவர் விளக்குவது ஏன்?

இதற்கு விடைகாண நாம் முன்பு கண்ட உவமையைப் போன்று, அரசனும் துறவியும் ஒரு வனேயாயினும் வெளித்தோற்றத்தால் மாறுபட்ட இருவராயினமையின், கடவுளுக்கும் நீத்தாருக்கும் இருவேறு அதிகாரங்கள் வகுக்கப்பட்டன. ஆட்சி மன்றத் தலைவன் அரசன். அறக்கருத்துகளைப் போதித்தவன் துறவி. ஆட்சி நிலையை நோக்கு மிடத்து கடவுளுக்கு முதலிடமும், முதல் அதிகார மும் ஒதுக்கப்பட்டு, அறக்கருத்தை நோக்குமிடத்து நீத்தாருக்கு அடுத்த இடமும் தனி அதிகாரமும் வகுக்கப்படுகிறது எனக் கொள்ள வேண்டியுள்ளது.

'நீத்தார்' என்பது அருவத்தை நீத்து உருவமான இறைவன் ஒருவனையே குறிப்பது என்பதைக் கண்டோம். உருவமாகி இப்பூமியில் மனிதனாகத் தோன்றிய நீத்தார் யார்? என்பதைக்காண வள்ளுவர் கூறும் நீத்தாரின் குணங்களைப் பகுத்து ஒவ்வொன்றாக நோக்குவோம்.

## 6. நீத்தாரின் குணங்கள்

நீத்தாரைப் பற்றிய விளக்கத்தை வள்ளுவர் 'நீத்தார் பெருமை'யின் கீழ் உள்ள பத்துக் குறட்பாக்களிலும் வைத்துள்ளார். அவைகளைப் பார்ப்போம்.

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு

ஒழுக்கத்து நீத்தார்: 'ஒழுக்கம்' என்ற சொல் பாயிரத்தின் நான்கு அதிகாரங்களையும் இணைக்கும் முறையை முன்பு நோக்கினோம். அறத்தை வலியுறுத்திக் காட்டுவதே திருக்குறளின் நோக்கம். அறத்தைப் பூண்டு ஒழுகிக் காட்டிய அறவோனாகிய அந்தணனே நீத்தார். அவனே ஒழுக்கத்தினைக் கண் நிலைநின்று, கடவுள் நிலையின் மேன்மையைத் துறந்தவனாக உலகில் தோன்றியவன். யார் யார்க்கும் வான் இல்லாமல் ஒழுக்கம் அடையாது. ஐந்தவித்தானாகிய கடவுள் காட்டிய பொய்தீர் ஒழுக்க நெறியில் நின்றவர்களுக்கே நீடுவாழ்வு உண்டு.

ஆகவே நீடுவாழ்விற்கும். ஒழுக்கத்திற்கும் — ஒழுக்கத்திற்கும் கடவுள், வான், நீத்தார், அறம் இவைகளுக்கும், தொடர்பு உண்டு. இவ்வொழுக்

கத்தை மனிதர்களுக்கு மனிதமுறையில் விளக்கிக் காட்டியவரே ஒழுக்கத்தின் கண் நிலை நின்றுகடவுள் நிலையின் மேன்மையைத் துறந்த நீத்தாராவார். ஆகவே ஒழுக்கத்து நீத்தார் என்பது, மக்கள் நீடுவாழ்வையடைவதற்காக, பொய்தீர் ஒழுக்க நெறியைக் காட்டிய, மனிதனாக வந்த கடவுளைக் குறிக்கிறது.

ஒழுக்கத்து நீத்தார் : ஒழுக்கத்தின்கண் நிலை நின்று கடவுள் நிலையின் மேன்மையை நீத்து உலகில் தோன்றியவர்.

**பனுவல் துணிவு:—** பனுவல் எனினும் நூல் எனினும் பொருள் ஒன்றே. நூல் இயற்றக்கூடிய ஆசிரியருக்கும் இலக்கணம் கூறப்படுகிறது. முதல் நூல், வழிநூல், சார்புநூல் ஆகிய மூன்றினுள்ளும் முதல்நூல் இயற்றும் தகுதியைக் குறித்து

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூலாகும்."

என நன்னூல் கூறுகிறது.

[ வினையின் நீக்கி விளக்கப்படும் அறிவினையுடைய உயிர் கட்கு, வினையின் நீங்கி விளங்கிய அறிவினையுடைய முதல்வன் ஆதிக்கண்ணே செய்தது யாது, அது முதநூலாம். ]

இதனுள் முதல்நூல் இயற்றும் தகுதி மனிதர் களுக்குக் கிடையாதெனவும், வினையின் நீங்கி விளங்கிய அறிவனும் இறைவனுக்கேயுண்டு எனவும் குறிப்பிடப்படுகிறது.

நூல் இயற்றும் தகுதி வினையின் நீங்கி விளங்கிய அறிவனுக்கேயுண்டு எனில், அதன் உட்பொருளாய் விளங்கும் தகுதியுடையவன் யார்? அவனே நீத்தார் என்பது வள்ளுவவர் கொள்கை. ஆகவே நீத்தார் மனிதரல்லர். அவர் பனுவல் துனிவாய் விளங்கும் ஒழுக்கத்து நீத்தார்.

ஒழுக்கத்து நீத்தார் பெருமையைச் சிறப்பித்துக் கூறவேண்டியதே பனுவல் துணிவாகும். ஆகவே, பனுவலின் மூலாதாரக் கருத்தாய் இருப்பவன் ஒழுக்கத்து நீத்தார். அதாவது வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் காணும் பனுவலின் உட்பொருளாய் இருப்பவன் ஒழுக்கத்து நீத்தார்.

ஒழுக்கத்து நீத்தாரின் பெருமையைச் சிறப்பித்துக் கூறவேண்டியதே பனுவல் துணிவு.

2. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று.

துறந்தாராகிய நீத்தாரின் பெருமையை அளவிட்டுக்கூறப் புகுந்தால் அது இறந்தவர்களை எண்ணிக் கணக்கிடுவதைப் போன்றதாகும். இறந்தவர்களை எண்ணிக் கணக்கிட முடியாது. அங்ஙனமே ஒழுக்கத்து நீத்தாரின் பெருமையையும் அளவிட்டுக் கூறமுடியாது. அவர் பெருமை அவ்வளவு உயர்ந்தது.

இங்கு நாம் வள்ளுவர் காட்டும் முக்கியக் குறிப்பு ஒன்றை ஆழ்ந்து நோக்குவோம். நீத்தார் பெருமையைக் கூறவந்த வள்ளுவர், இறந்தவர்களைப் பற்றிக் கூற வேண்டிய காரணமென்ன? எண்ணிக்கையின் மிகுதியை உணர்த்த இதைவிடச் சிறந்த உவமை இல்லையா? நீத்தாருக்கும் இறப்புக்கும் தொடர்புண்டா? என்ற வினாக்கள் இங்கே எழுகின்றன. ஐந்தவித்தான் காட்டிய பொய்தீர் ஒழுக்க நெறியில் நிற்பவர்களுக்கு நீடுவாழ்வு உண்டு எனக்கடவுள் வாழ்த்துச் செய்யுள் கூறுகிறது. இங்கு துறந்தாராகிய நீத்தார் பெருமையை அளவிட்டுக் கூறுதல் இறந்தவர்களை எண்ணிக் கணக்கிடுவதைப் போன்றது எனக் கூறப்படுகிறது.

*நெறிநின்ருர் நீடுவாழ்வார்* —6
*இறந்தாரை எண்ணிக்கொண்டற்று* —22

அவன் வழி நின்ருர்க்கு நீடுவாழ்வு உண்டு எனவும், அவன் பெருமையைக் கணக்கிடுதல் நீடு வாழ்வளிக்கும் அவன் நெறியை அறியாது இறந் தாரை எண்ணிக் கணக்கிடுவதைப் போன்ற தெனவும், நீடுவாழ்வு, இறப்பு ஆகிய இரண்டிற்கு மிடையே ஒரு தொடர்பு குறிக்கப்படுகிறது. அதாவது இறப்பை வென்று நீடுவாழ்வு நிலைபெறும் படியாகச் செய்தவன் துறந்தாராகிய ஒழுக்கத்து நீத்தார் என்பது இக்குறட்பாவால் விளக்கப் படுகிறது.

இக்குறட்பாவிற்கு விளக்கங் கூறுங்கால் திருக் குறள் மணிவிளக்கவுரை ஆசிரியராகிய பன்மொழிப் புலவர். கா. அப்பாத்துரையார் அவர்கள்

'இறப்பவர்க்கெல்லாம் இறவா வாழ்வளிக்க, இறவா வாழ்வின் வளம் கிடைக்கப் பாடுபவர் துறவோர்' —மணிவிளக்கவுரை 1 பக். 589

எனக்குறிப்பிடுவதன் மூலம் ஒழுக்கத்து நீத்தார் இறப்பை வெல்லுபவர் என்ற கருத்தைக் காட்டுகிருர்கள். ஆகவே ஒழுக்கத்து நீத்தாரால் இறப்பு வெல்லப்பட்டு நீடுவாழ்வு நிலைநிறுத்தப்படு கிறது என்பதை இக்குறட்பா நமக்குக் கூறுகிறது. அதாவது ஒழுக்கத்தின் கண் நிலைநின்று கடவுள் நிலையின் பெருமையைத் துறந்து இவ்வுலகில் தோன்றி இறப்பை வென்றவரே நீத்தார் என்பது விளங்குகிறது.

*இருமை வகைதெரிந்து ஈண்டறம் பூண்டார்*
*பெருமை பிறங்கிற் றுலகு*

இங்கு இருமை என்பது இம்மை, மறுமை ஆகிய இரண்டையும் குறிக்கிறது என்பதை, பின்னர் வள்ளுவர் தன் நூலுள் கொடுக்கும் விளக்கத்தால் அறிகிறோம்.

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பந்தரும் —98

இன்மை என ஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும் —1042

மனிதர்களுக்கு இம்மையைப்பற்றி மட்டுமே ஓரளவுதெரியும், மறுமையைப்பற்றித் தெரிந்திருக்க வழிஇல்லை. ஆனால் இம்மை, மறுமை ஆகிய இருமையையும் தெரிந்தவன் இறைவன் ஒருவனே. அவன் கடவுள் நிலையின் மேன்மையைத் துறந்து மனிதனாகி ஒழுக்கத்தின்கண் நிலைநின்று ஈண்டு அறம் பூண்டக்கால், மறுமைக் காட்சியை இம்மையில் இருக்கும் மனிதர்களுக்கு விளக்க வல்லவனாகிறான். மறுமையைப்பற்றி எம்மனிதனும் தெளிவாகக் கூறமுடியாது. கடவுள் ஒருவனே அதை விளக்க முடியும். அறம்பூண்டு அதை விளக்கியவனே நீத்தாராகிய கடவுள். ஆகவே அவன் பெருமையே இவ்வுலகத்தின் மற்றெல்லாவற்றிலும் மிக உயர்ந்தது.

இன்னொரு கருத்தையும் வள்ளுவர் இக்குறட்பாவினுள் சுட்டுகிறார். நீத்தார் நீத்தமைக்கான காரணமும் இதனுள் சுட்டப்படுகிறது.

மறுமையில் இன்பத்தை இழந்து துன்பத்தையடையும் மக்களுக்காக மனம் இரங்கிய கடவுள், மறுமையில் அவர்கள் இன்பத்தை அடையும்படியாகத் தன் நிலையின் பெருமையை நீத்து, மனிதனாகி ஈண்டு அறம் பூண்டு, பொய்தீர் ஒழுக்க நெறியைக் காட்டி, அவர்களுக்கு நீடுவாழ்வை அளித்தார்.

ஆகவே, மக்கள் நீடுவாழ்வடைவதற்காகவே கடவுள் ஒழுக்கத்து நீத்தாராகி, ஈண்டு அறம் பூண்டார். எனவே, அவருடைய பெருமைக்கு இணை இவ்வுலகில் வேறெதுவும் இல்லை. பெருமை பெற விரும்புபவர்கள் பின்பற்ற வேண்டியது அவன் காட்டிய பொய்தீர் ஒழுக்க நெறியையே யன்றி மற்றவைகளையல்ல.

'இருமை' என்ற சொல்லால், இம்மை, மறுமை ஆகிய இரண்டையும் அறிந்த கடவுள், 'ஈண்டு' என்னும் சொல்லால் தன் நிலையை நீத்து ஐம்புலனை யேற்று இவவுலகிற்கு வந்து, 'அறம்பூண்டார்' என்னும் தொடரால் அறத்தின் உருவாய் விளங்கி வள்ளுவர் தன் நூலுள் வலியுறுத்திக் கூறும் அறத்தை விளக்கிக் காட்டினர் என்பன தெளிவாக் கப்படுகின்றன.

வள்ளுவர் இக்குறட்பாவில் ஒழுக்கத்து நீத்தார் என்பதற்கான விளக்கத்தைக் கொடுப்பதாகத் தெரி கிறது. (ஒழுக்கத்து நீத்தார் = இருமைவகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார்). 'ஈண்டு' என்னும் சொல் ஆழமான கருத்துடன் ஆளப்பட்டி ருத்தல் நோக்கத்தக்கது. ஈண்டு அறம் பூண்ட அவனே அறவோனாகிய அந்தணன் அல்லது அற வாழி அந்தணனாகிய கடவுள்.

*உரனென்னும் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்*
*வரனென்னும் வைப்பிற்கோர் வித்து*

இங்கு குறிக்கப்படும் 'ஐந்து' என்னும் சொல் ஐம்புலன்களையும் குறிக்கிறது. தோட்டி சுட்டப்பட் டுள்ளமையால், புலன்கள் யானைகளாக உவமிக்கப் பட்டுள்ளமை விளங்குகிறது. 'உரன்' என்னும் சொல்லை வள்ளுவர் இவ்விடத்தைத் தவிர,

*உரனென்னும் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து*

என்ற குறட்பாவில் மட்டுமே ஆண்டுள்ளார். இவ்விரு இடங்களிலும் 'வெற்றி' என்னும் பொருளிலேயே ஆண்டுள்ளமை விளங்குகிறது. ஆகவே, 'உரன்' என்னும் தோட்டிக்கு வெற்றி என்னும் அங்குசம், பொருளாகிறது. வெற்றி என்னும் அங்குசத்தால் ஒப்பற்ற ஐந்து புலன்களையும் காப்பவன் ஒழுக்கத்து நீத்தார் என்பது, 'உரன் என்னும் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்' என்னும் தொடரால் சுட்டப்படுகிறது. ஐம்புலனையும் வெற்றி கொண்ட ஆற்றல் அடுத்த குறட்பாவில் விளக்கப்படுகிறது.

நீத்தார் பெருமையின் கீழ் கூறப்படும் ஓரைந்துங் காப்பான், ஐந்தவித்தான், ஐந்தின் வகை தெரிவான், ஆகிய மூன்று குறட்பாக்களும் சுட்டும் ஐம்புலன், ஒழுக்கத்து நீத்தாருடையது மட்டுமன்றி, ஐம்புலனை ஏற்ற கடவுள், தன் ஐம்புலனையும், வகை தெரிந்து காத்து அவித்ததுடன், மற்ற உலக மக்களுடைய ஐம்புலனையும் வகை தெரிந்து காத்து, அவிப்பவனாக விளங்குகிறான் என்பதையும் சுட்டும்படியாக ஆளப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் அவர்களும் இக்கருத்தினையேவெளியிட்டுள்ளார்கள்

'இங்கு ஐந்து யானைகளாக உவமிக் கப்பட்ட ஐந்து பொறிகள் சுட்டிற்று. இந்த ஐம்பொறிகள் ஒழுக்கத்து நீத்தாருக்குரியவையல்ல. அவர் ஒழுக்கத்து நீத்தாராதலால் அவை ஏற்கனவே தன்னல வழிகளில் செல்லாமல் பொது நலவழிகளில் மட்டுமே செல்பவை. அவர் அடக்கவேண்டிய ஐம்பொறிகள் சமுதாய மக்களது ஐம்பொறிகள்'

—மணிவிளக்கவுரை : 1. பக்627

உலகமக்களுடைய ஐம்புலனின் இறுதிநிலை அவனையடைதலே. அவனுடன் ஒன்றித்தலே; இக்கருத்துக்களையே இக்குறட்பாவில் விளக்குகிறார்.

இக்குறட்பாவிலுள்ள ஐந்து, வரன், வித்து ஆகிய சொற்களுக்கிடையேயுள்ள தொடர்பை நோக்குவோம். ஐந்து, ஐம்புலனைக் குறிக்கிறதென்பதில் கருத்து வேறுபாடு இல்லை, 'வரன் என்னும் வைப்பு' என்பது வீட்டுலகைக் குறிக்கிறதெனக் கொள்ளுகின்றனர். வீட்டுலகு என்பதை மட்டும் குறிப்பதற்கு வள்ளுவர் இம்மூன்று சொற்களை ஆண்டிருக்கிறார் எனக் கொள்ளுவதை விட, இங்கு ஒரு மேலான பொருள் அடக்கப்பட்டிருத்தலை ஆழ்ந்து நோக்குவோர் காணமுடியும்.

'வரன்' என்பது மணமகனைக்குறிக்கும் தமிழ்ச் சொல்லே என்பது பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அவர்களின் கருத்து.

—மணிவிளக்கவுரை : 1. பக் 630)

வைப்பு என்பது உலகைக்குறிக்கும் என்பதை 'நாம நீர்வைப்பு' (149)என்னும் சொற்றொடரால் அறிகிறோம். வரன் என்னும் வைப்பு = மணமகனாகிய வீட்டுலகு. தன்னைத் தலைவியாகவும் கடவுளைத் தலைவனாகவும் கொள்ளும் வழக்கு சமய இலக்கியங்களில் உண்டு. அம்முறையில் மணமகனாக விளங்குபவன் இறைவன். மணமகளாக விளங்குவது ஆன்மா (உயிர்). ஐம்புலன், மணமகன், வித்து இவற்றின் தொடர்பாக ஐம்புல இன்பத்தைப்பற்றித் திருவள்ளுவர் இன்பத்துப் பாலில் கூறும்.

**கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்**
**ஒண்டொடி கண்ணே யுள.**

என்னும் குறட்பாவையும் நோக்க வேண்டுவது அவசியம். சமய இலக்கியங்கள், இவ்வுலகின் தலைவன் தலைவி இருவரும் அடையும் இன்பம் சிற்றின்பமெனவும் கடவுளாகிய மணமகனும் உயிர் களாகிய மணமகளும் அடையும் இன்பமே பேரின்ப மெனவும் கூறுகின்றன. அவ்வகையில் ஐம்புலத் தொடர்பு இருவகைகளில் சித்திரிக்கப்படுகின்றது. சிற்றின்பத் தொடர்பு நீக்கப்படும்பொழுது அல்லது ஐம்புலன் காக்கப்படும்பொழுது அங்கே பேரின்பத் தொடர்பு தோன்றுகிறது. இதை விளக்குமுகத் தான் இன்பத்துப்பாலில், ஏன் தன் நூலின் இறுதிக் குறட்பாவினுள்

'அதற்கின்பம் கூடி முயங்கப்பெறின்' —1330

என வள்ளுவர் கூறியுள்ளார்.

ஐம்புல இன்பம் கூடி முயங்கப்பெறின் கிடைக்கும். 'பெறின்' என்னும் சொல்லால் அதன் அருமையை வெளிக் காட்டுகிறார் வள்ளுவர்.

"முதிர்ந்த துனியாய வழித்துன்பம் பயத்த லானும் முதிராத புலவியாய வழிக் கலவியின்பம் பயவாமையானும் இரண்டிற்கும் இடையாகிய அள வறிந்து நீங்குதல் அரிது என்பது பற்றிக் 'கூடி முயங்கப் பெறின்' என்றான்" எனப் பரிமேலழகர் பொருள் உரைத்தார்.

எனவே, ஒன்றின் அளவறிய முடியாத பிறிதொரு உயிருடன் கூடும் இரு உயிர்களின் கூட்டு, குறைபாடுடையதெனவும், உயிர்களின் அளவறிந்து ஈயும் பெருமணமகனும் இறைவனின் கூட்டே, உயிர்களுக்கு முழுமையான இன்ப மளிப்பதென்பதும் விளக்கப்படுகிறது.

அம்முழு இன்பத்தை உயிர்கள் அடையும் படியாக இறைவனுக்கிய மணமகனுக்கு வித்தாக விளங்குபவனே ஒழுக்கத்து நீத்தார்.

ஓரிடத்திலுள்ள மரம் பிறிதோரிடத்தில் தோன்று வதற்குக் காரணமாய் அமைவது வித்து. மறுமை யின் இன்பத்தை இம்மைக்குக் கொண்டு வந்தவன் ஒழுக்கத்து நீத்தார். மறுமையில் இறைவனுடன் இரண்டறக் கலந்த நிலையில், அதாவது தனித் தன்மை இழக்காமல் தன்னை மறந்த நிலையில் இருக் கப்போகும் உயிர், இம்மையிலேயே இருமைவகை தெரிந்து ஈண்டு அறம் பூண்ட ஒழுக்கத்து நீத்தா ராகிய வித்தின் மூலம், ஐம்புலனின் அப்பேரின்பத் தை அறியும் நிலையை அடைகிறது. வரன் என்னும் வைப்பாகிய கடவுளுக்கு ஒப்பற்ற வித்து, ஒழுக்கத்து நீத்தார். ஒழுக்கத்து நீத்தாராகிய அவ்வொப்பற்ற வித்தை ஏற்றுக் கொள்ளும் உள்ளமாகிய நில மெதுவோ அதில், ஒழுக்கத்து நீத்தாராகிய வித்து முளைத்துக் கடவுளாகியமரம் தோன்றும். அந்நிலமும் மரமும் ஒன்றித்துப் பேரின்பத்தில் நிலைகொள்ளு கின்றன. அந்நிலை மறுமையில் மட்டு மல்ல இம்மையிலேயே தோன்றிவிடுகிறது. ஐம்புல இன் பத்தின் முழுமையான நிலை இங்கே தோன்றுகிறது. சிற்றின்ப நிலை நீங்கிப் பேரின்பநிலை வளர்கிறது. 'ஒண்டொடிகண்ணேயுள' என்னும் அடி இன்பம் தோன்றும் இடத்தைத் தேற்றேகாரமிட்டுக் காட்டு கிறது.

இது, வித்து நிலம் ஆகிய இரு பொருட்களுள் இன்பம்,தோன்றுமிடம்,இன்பத்தை அனுபவிக்கும் இடம் உள்ளமாகிய நிலமேஎன்பதைக் காட்டுகிறது. இன்பத்துக்குக்காரணமானவன்ஒழுக்கத்துநீத்தார்; இன்பத்தை அனுபவிக்கும் இடம் உள்ளமாகியநிலம். ஆகவே இன்பத்தை உணர்வன உயிர்கள். இன்

பத்துக்குக் காரணமானவனே கடவுள். கடவுள் இன்பத்தை உலகில் உணரச் செய்பவனே ஒழுக்கத்து நீத்தார் என்பன விளக்கப்படுகின்றன.

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும்ஐம்புலனுக்கும் இன்பம்கொடுக்கும்படியாக, வரனென்னும் வைப்பிற்கோர் வித்தாகியஒழுக்கத்து நீத்தார் ஐம்புலனேற்று, உரனென்னும்தோட்டியால் ஓரைந்தும் காத்தார் அவரால் காக்கக்பபட்டவை. அவரது ஐம்புலன் மட்டுமல்ல. வித்துமுளைப்பதற்குக் காரணமான நிலமாம் உள்ளத்தையுடயவர்களின் ஐம்புலனுமே காக்கப்படுகின்றன.

ஆகவே இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்ட ஒழுக்கத்து நீத்தார், மறுமைப் பேரின்பம் இம்மையில் நிலைகொள்ளும் படியாக வரன் என்னும் வைப்பிற்கோர் வித்தாக விளங்குகிறார்.

வித்தாகிய ஒழுக்கத்து நீத்தார் தன்ஐம்புலனையும் என்னென்ன செய்தார் என்பதும் விளக்கப்படுகிறது. ஓரைந்தையும் காத்ததுடன் ஐந்தையும் அவித்தான். வித்து முளையாகி மரமாகவேண்டுமானால் அது தனித்திருந்தால் முடியாது. அது நிலத்தில் விழுந்து தன்நிலை மாறவேண்டும். அப்போதுதான் புதுமுளை தோன்றும். அவ்வாறே ஒழுக்கத்து நீத்தாராகிய வித்தின் ஐம்புலனும் அவிக்கப்பட்டன. அவி : பலியுணவு. அதாவது பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டன. (விளக்கம் 'ஐந்தவித்தான் யார்?' காண்க)

வித்து பூமியிலே புதைக்கப்பட்டு மீண்டும் புத்துயிர் பெற்று எழுவதைப்போன்று, நீத்தாரும் அவியாக்கப்பட்டு, பூமியில் புதைக் கப்பட்டு, மீண்டும் புத்துயிர் பெற்றுப் புதுநிலை அடைந்தார்.

இந்த ஆற்றலுக்கு அகல் விசும்புளார் கோமான் இந்திரனே சான்று.

5. ஐந்தவித்தானாற்றலகல் விசும்புளார் கோமான்
இந்திரனே சாலுங்கரி.

ஆகவே ஓரைந்துங்காத்ததுடன், ஐந்தவித்துத் தன் ஆற்றலையும் வெளிக்காட்டினான் வித்தாகிய ஒழுக்கத்து நீத்தார்.

வித்து என்றால் அது முளைத்தால்தான் பயன் உண்டு. முளைக்கவில்லை எனில் அவ்வித்து பயனற்றது. வித்துபூமியில் புதையுண்டு தன்னைமாற்றத்திற்கு உட்படுத்திப்பின்னர் புதுமுளையாகி வெளிவருகிறது. இந்த ஆற்றலைத்தன்னுள் அடக்கியிருப்பதே வித்து. ஒழுக்கத்து நீத்தாராகிய வித்துக்கும் இந்த ஆற்றல் உண்டு என்பதையே ஐந்தவித்தான் ஆற்றல்என்ற சொற்களால் வள்ளுவப் பெருந்தகை விளக்குகிறார்.

*(விளக்கம் ஐந்தவித்தான் யார்? காண்க)*

இவ்வகையான ஐம்புலமாற்றத்தை உலகில் தோன்றிய வேறு எந்த மனிதனும் செய்யமுடியாது. ஆகவே அவர்கள் யாவரும் சிறியவர். ஆனால் வரன் என்னும் வைப்பிற்கோர் வித்தாகிய ஒழுக்கத்து நீத்தார் ஒருவருக்கு மட்டுமே, அத்தகைய செயற்கரிய செய்யும் ஆற்றல் உண்டு. ஆகவே செயற்கரிய செய்தஅவர்ஒருவரே உலகில்யாவரிலும் பெரியவர். அவருடன் ஒப்பிடுங்கால் மற்றயாவரும் சிறியவரே.

6. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலாதார்

உலகில் யார் பெரியவர்? என்ற கேள்விக்கு விடையையும், உலகில் நானே பெரியவன் எனத் தருக்கிநிற்கும் மனிதனின் சிறுமையையும் காட்டு கிறது இச்செய்யுள். ஒப்பற்ற வித்தின் ஆற்றலாகிய செயற்கரிய செயலைக்கண்டோம். அவருக்கும் உலகுக்கும் உள்ள தொடர்பை ஆராய்வோம். ஐந்தைக்காத்து, ஐந்தையும் அவித்தலையும் கண்டோம். ஐந்தின் வகையை இனி நோக்குவோம்.

7. சுவை ஒளி ஊறு ஓசை நாற்ற மென்றைந்தின்
வகை தெரிவான் கட்டே யுலகு.

ஒழுக்கத்து நீத்தாராகிய வித்தை ஏற்றுக் கொண்ட நிலமாகிய உள்ளம் கண்டு, கேட்டு, உண்டுயிர்த்து, உற்றறியும் ஐம்புலனிலிருந்து,சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தின் வகை தெரியும் நிலையை அடைகிறது. இவ்வகையைத் தெரிபவனும், தெரியவைப்பவனும் வரன் என்னும் வைப்பிற்கோர் வித்தாகிய ஒழுக்கத்து நீத்தாரே. வித்தில்லாப் பழைய நிலத்திற்கும், வித்தையுடைய புதிய நிலத்திற்கும் வேற்றுமையுண்டு. நிலத்தில் வேற்றுமையை விளைவிப்பது வித்து. வேற்றுமை யடைவது வித்தாகத் தோற்றமளிப்பினும், வேற்றுமையை அறிந்து மகிழும் நிலை நிலத்திற்கேற்படு கிறது. வித்தில்லாத்தனி நிலத்திற்கும், வித்தினைப் பெற்று வளர்த்துள்ள தோப்பு நிலத்திற்கும் மதிப்பில் வேற்றுமையுண்டு. நிலம் என்ற வகையில் இரண்டிற்கும் வேற்றுமைதோன்றுவிடினும் வித்தை ஏற்றுக்கொண்ட நிலையில் வேற்றுமையுண்டு. ஆகவே ஐந்தின் வகையினை அறிந்து அதை விளக்கும் ஆற்றல் பெற்றவன் ஒழுக்கத்து நீத்தாரே. 'கட்டே உலகு' என்பதில் உள்ள தேற்றேகாரம் நோக்கத் தக்கது. வகைதெரிவான் கண்ணதே யுலகம். உலகம் என்பது உயர்ந்தவர்களைக் குறிக்கிறது. ஐம்புல அறிவின் கீழ்நிலையிலிருந்து உயர்ந்து

செல்லும் மேலோர் அடையும் இறுதிப்படி அவனே என்பதை 'வகைதெரிவான் கட்டேயுலகு' என்னும் சொற்கள் குறிக்கின்றன.

ஐம்புலனுக்கும் எட்டாதவன் கடவுள். ஐம்புலனாலும் அடையக்கூடியவன் வித்தாகிய நீத்தார். அவனின்றேல் கடவுளைப்பற்றிய ஐம்புல உணர்வு இல்லை.

இங்கே இன்னொரு குறிப்பும் நோக்கத்தக்கது. இக்குறட்பாவில் சுவைக்கு முதலிடம் கொடுக்கக் காரணம் என்ன? இன்பத்துப்பால் செய்யுளில் காட்சிக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. அங்கு இன்பம் காட்சியிலிருந்து விரிவடைகிறது. இங்கு வாய்க்கு முதலிடம் கொடுக்கப்படுவானேன்? அதன் உட்பொருள் என்ன? சுவை இருவகைப்படுகிறது. 1. வாய்ச்சுவை. 2. செவிச்சுவை. வாய்ச்சுவையினும் சிறந்தது செவிச்சுவையே. ஆகவேதான்

*செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்*
*அவியினும் வாழினும் என்* —420

என்ற வினா எழுப்புகின்றார். அடுத்து,

*படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்காது ஒன்றன்*
*உடல் சுவை உண்டார் மனம்.* —253

என வாய்ச்சுவையைச் சாடுகின்றார். வாய்ச்சுவை அறுவகைப்படும். செவிச்சுவை ஒன்பது வகைப்படும். வாய்ச்சுவைக்குக் காரணமானது அறுசுவைப் பொருட்கள். ஒன்பான் சுவையையும் பயக்கும் செவிச்சுவைக்குக் காரணமானது நாவு ஒன்றே. ஒருவர் நாவினால் பேசும் பேச்சு பிறிதொருவருக்குச் செவிச்சுவை பயக்கிறது.

ஆகவே செவிச்சுவை, வாய்ச்சுவை ஆகிய சுவை வகையில் சிறந்து விளங்குவது செவிச்

சுவையே. அச்செவிச்சுவையைப் பயக்கும் கருவி நாவு. உள்ளத்தின் எண்ணத்தை மொழியாக்கி வெளிப்படுத்துவதும் நாவே. நாவின்றேல் மொழி இல்லை. எண்ண வெளிப்பாடாகிய மொழியே அற வளர்ச்சிக்கு அடிப்படை; மொழியின்றேல் அற வளர்ச்சி இல்லை; அறத்தைப்பற்றிய அறிவு இல்லை. அறவுணர்வும் இல்லை. ஆகவே அறத்திற்கு அடிப் படையானது மொழி.

மனித மொழிகள் யாவும் எண்ணத்தை முழு வதுமாக விளக்குகின்றனவா? ஓரளவு விளக்கப் பயன்படுகின்றன என்றுதான் கூற முடியுமேயன்றி நிறைவாக விளக்குகின்றன எனக் கூற முடியாது.

ஆகவே, மனித மொழிகள் யாவும் குறை பாடுடையனவே. இவைகளை நிறைமொழி எனக் கூற முடியாது. ஆனால் நிறை மொழி ஒன்று உண்டு என வள்ளுவர் கூறுகின்றார். அம்மொழியே கடவு ளின் எண்ணத்தை வெளிக்காட்டிய, கடவுளின் வித்தாம் நீத்தாராகிய நிறைமொழி மாந்தராகும் ஒழுக்கத்து நீத்தாரே நிறைமொழி. அவரே நாம் செவியினால் சுவைக்கவல்ல ஒன்பான் சுவையும் ஒருங்கே அமையப் பெற்ற, கடவுளின் மொழியாம், நிறைமொழி. அவர் மனிதராக ஐம்புலனுடன் வந்தமையால் நிறைமொழி மாந்தர் எனப்படுகிறார்.

**8. 'நிறைமொழி மாந்தர் பெருமை, நிலத்து மறைமொழி காட்டி விடும்.'**

உலகிற்கு வந்த இந்த நிறைமொழி கடவு ளுடையது. கடவுளோடிருந்தது. கடவுளாய் இருந்தது. ஆதியிலே இருந்தது. என்றும் இருப்பது.

**ஒழுக்கத்து நீத்தார் நிறைமொழி மாந்தர் என அழைக்கப்படக் காரணம் என்ன?**

அரசனின் எண்ணம் நாட்டில் செயல்படுகிறது. எவ்வாறு? அரசனின் எண்ணம் சொல்லாகி அவனைப் பிரிந்து மக்களிடைப் பரவுகின்றது.

சொல்லுக்கு இரண்டு வடிவங்கள் உள்ளன.

1. ஒலி வடிவம்
2. வரி வடிவம்

ஒலி வடிவம் நேரடியானது. அரசனுடன் இணைந்தது. ஆனால் சிறிது காலத்தில் மறைவது. அந்த ஒலியைக் கேட்டவர்கள் எழுதும் சொல், வரி வடிவம். அது என்றும் நிலைத்திருப்பது. ஆனால் அரசனிடமிருந்து ஒருபடி தாண்டி வருவது. முற்காலத்தில் அரச கட்டளையை ஓலையில் எழுதும் ஓலை நாயகம் என்னும் அதிகாரி அரச சபையில் இருந்தமையை இலக்கியம் கூறுகிறது. அரசன் வாயிலிருந்து பிறந்த, ஒலி வடிவான சொல்லுக்கு வரி வடிவம் கொடுப்பவன் ஓலை நாயகம். ஆகவே, கட்டளையாகிய சொல்லின் தன்மையைக் காட்டுவது எழுத்தாகிய சொல்லினையுடைய ஓலை.

அவ்வாறே கடவுளின் சொல்லாகிய மொழியாய் இருப்பவர் ஒழுக்கத்து நீத்தார். உலகிலுள்ள மற்ற மனிதருடைய சொல்லாகிய மொழியுடன் ஒப்பிடுங்கால் இது ஒன்றே நிறை மொழி. நிறைமொழியே மனித உரு ஏற்று வந்த காரணத்தால் இவர் நிறை மொழி மாந்தர் எனப்பட்டார். இந்த நிறை மொழியை இறையடியார் கேட்டனர். அதை எழுதி வைத்தார்கள். அதாவது ஒலி வடிவத்திற்கு வரி வடிவம் கொடுத்தனர். நிறைமொழி மறைமொழியாயிற்று. மன்னனையும், மக்களையும், மன்னனின் சொல்லாகிய ஒலி வடிவமும், ஓலை நாயகத்தின் எழுத்தாகிய வரிவடிவமும் இணைப்பதைப் போன்று கடவுளையும், மனிதர்களையும், நிறைமொழியும், மறை மொழியும் இணைக்கின்றன.

மன்னனின் சொல்லாகிய ஒலி வடிவத்தின் தன்மையை, ஒலி நாயகத்தின் வரிவடிவம் காட்டுவதைப் போன்று, நிறை மொழியின் பெருமையை இந்நிலவுலகில் மறை மொழி காட்டுகிறது.

முதல் மூன்று குறட்பாக்களிலும் ஒழுக்கத்து நீத்தாரின் பெருமையைக் கூறிய வள்ளுவர் இக் குறட்பாவில் ஒழுக்கத்து நீத்தாரின் பெருமையைக் கண் காண விளக்கும் அடையாளத்தையும் கூறுகின்றார். இதன் மூலம் அவர் பெருமையை யாரும் மறைத்துவிட முடியாது; அதை மறைமொழி காட்டி விடும் என வற்புறுத்திக் கூறுகின்றார். 'காட்டி விடும்' என்னும் சொற்றொடர் 'ஒரு கண்கூடான சான்றாகிவிடும்' என்னும் கருத்தை வெளியிடுகிறது.

இக்குறட்பாவின் மூலம் வார்த்தையானவர் மனுவுருவானார்; அதாவது நிறைவான மொழியானவர் ஐம்புலனையேற்று மாந்தராகி, நிறைமொழி மாந்தரானார். அதாவது சொல் (word), அதன் மூல இடத்திலிருந்து பிரிந்து மாந்தராயிற்று என்னும் கருத்தை வள்ளுவர் வெளியிடுகின்றார். முதற் குறட்பாவுக்கும் இதற்கும் உள்ள தொடர்பு நோக்கத் தக்கது. பனுவல் துணிவும், மறைமொழி காட்டி விடுவதும் ஒழுக்கத்து நீத்தாராகிய நிறைமொழி மாந்தருடைய பெருமையையே யாகும். முதற் குறட்பாவில் கூறப்படும், பனுவலுக்கும் இக்குறட் பாவில் கூறப்படும் மறைக்கும் உள்ள வேற்றுமை என்ன? பெருமையைத் துணிந்து கூறுவது (assertion) பனுவல்; பெருமையை இந்நிலவுலகின்கண் சான்றாகக் காட்டி (proof) நிற்பது மறை.

---

'நிலத்து' என்னும் சொல்லால் மறைமொழி இந்நிலவுலகில் மட்டுமன்றி இதைக் கடந்து செல்வது என்பதையும் விளக்குகிறார் வள்ளுவர்.

மக்களைக் காக்கும் பொருட்டாக அரசனால் இடப்படும் கட்டளை, நாட்டு மக்களைக் காப்பதுடன் மட்டும் நின்று விடுவதில்லை காப்பதற்காகவே போடப்பட்ட கட்டளை அதை மீறுகிறவர்களை அழிக்கும் கருவியாகவும் மாறிவிடுகிறது. அக்கட்டளை அழிக்கும் கருவியானமைக்குக் காரணம் கட்டளையின் தன்மையாலன்று. அதை ஏற்றுக்கொள்ளும் உள்ளத்தின் தன்மையாலேயேயாகும்.

பயிர்களை வளர்ப்பது கதிரவன் ; பயிர்கள் தன் நிலை திரிந்தவிடத்து, அதாவது பூமியில் நிலைபெற்றிருக்க வேண்டிய பயிர், பூமியில் நிலை பெறுமல் பிடுங்கப்பட்ட காலை, எக்கதிரவன் அவைகள் வளருவதற்குக் காரணமாய் இருந்தானே, அக்கதிரவனே அவைகளை அழிக்கின்றான். ஆனால் கதிரவன் பயிர்கள் அழியும் பொருட்டுச் செயல்படுவன் அல்லன். பயிர்கள் தங்கள் தன்மையினால் கதிரவனிடமிருந்து ஆக்கத்தையோ அழிவையோ அடைகின்றன.

அவ்வாறே உயிர்கள் நீடுவாழ்வையடையும் பொருட்டாக அவைகளுக்குப் பொய்தீர் ஒழுக்க நெறியைக் காட்டியதுடன், அவைகளுக்காகத்தன் ஐம்புலனையும் பலிப்பொருளாக்கி ஐந்தவித்தானாக விளங்குகிறார் ஒழுக்கத்து நீத்தார்.

பொய்தீர் ஒழுக்க நெறியைக்கட்டிய ஒழுக்கத்து நீத்தாரின் நெறியில் நிற்காதவர்கதி என்ன?

> 9. குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
> கணமேயும் காத்தல் அரிது.

நற்குணமாகிய குன்று அவனே. அதுமட்டுமல்ல குன்றின் உச்சியும் அவனே. அவன் நெறி நின்றார் நீடு வாழ்வார். (6) அப்படியானால் நெறி நிற்காதவர் நிலை என்ன? நீடு வாழமாட்டார்கள்

என்பது தானே பொருள். அதையே இங்கு கூறு கின்ருர் வள்ளுவர். அவன் நெறி நிற்காதவர் அவன் வெகுளியைக் கணமும் காத்தல் அரிது.

குணம், வெகுளியாவதற்குக்காரணம் ஏற்றுக் கொள்ளும் உள்ளமேயொழிய கொடுக்கும் அவன் அல்லன்; அவன் என்றும்மாருதவனே. கதிரவனின் கதிர்களில் ஏற்றத்தாழ்வு இல்லை. ஆனல் அதை ஏற்கும்பயிர்களின் தன்மையால், பூமியில் நிலைபெற்ற பயிர்கள் வளர்ச்சியையும், நிலைபெருப் பயிர்கள் அழிவையும் அடைவதைப் போன்று, அவன் நெறி நிற்போர் நீடு வாழ்வையும் மற்றவர் மாருனதையும் அடைகின்றனர். கணமேயும் காத்தல் அரிது, என்னும் தொடரால் ஒழுக்கத்து நீத்தார், வெகுளியைத் தன் உள்ளத்தில் கணமேயும் காத்தல் அரிது என்னும் கருத்தையும், உயிர்கள் ஒழுக்கத்து நீத்தாரின் வெகுளியைக் கணமேயும் தாங்கிக் கொள்ளுதல் அரிது என்னும் கருத்தையும், வெளி யிடுகிருர் இதன் மூலம் ஒழுக்கத்து நீத்தாரின் பெருமையும், உயிர்களின் சிறுமையும் காட்டப் படுகின்றன.

குணமென்னுங் குன்றேறி நின்ருர் ஒழுகிக் காட்டியதே அறம். அவ்வறத்தை வலியுறுத்திக் காட்டுவதே திருக்குறளின் நோக்கம். ஒழுக்கத்து நீத்தார் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்ட காரணத்தால் அறத்தை மேற்கொண்டு ஒழுகிக் காட்டி அறவோரானுர். அவ்வறவோரே அறவாழி அந்தணனுகிய கடவுள். கடவுளுக்கு அந்தணர் என்ற பெயர் வரக் காரணமானவரும் இவ்வொழுக் கத்து நீத்தாரே.

10. அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான்

'மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகிய அறவோர்' என்ற தொடரால் 'மற்று எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகி, அறத்தை நிலைநிறுத்திய அந்தணராகிய ஒழுக்கத்து நீத்தார், தன்னுயிர்க்குச் செந்தண்மை பூணாமல், மன்னுயிர் பொருட்டுத் தன்னுயிரைப் பலியாக்கி ஐந்தவித்தானாக விளங்குகிறார்' என்னும் கருத்தையும் விளக்குகிறார்.

நிறைமொழி மாந்தராகிய அந்தணர் பெருமையை நிலத்தில் காட்டி நிற்பதே மறைமொழியாகும். ஆகவே பெருமையைக் காட்டும் மறைமொழியாகிய வேத நூலுக்கு அந்தணர் நூல் என்ற பெயரையும் வள்ளுவர் சூட்டுகின்றார்.

அந்தணர் நூல் நிறை மொழி மாந்தர் பெருமையை, இந்நிலத்திலே காட்டும் கருவியாக விளங்குகிறது. அவ்வந்தணர் நூலால் நிலை நிறுத்திக் காட்டப்படுவதே அறவோராகிய ஒழுக்கத்து நீத்தார் காட்டிய அறம். அந்தணர் நூல் மறக்கப்படுமானால் அறமும் மறக்கப்பட ஏதுவாகிறது. ஆகவே அந்தணர் நூலும் அறமும் இணைந்து செல்லுகின்றன. அறத்திற்கு அடிப்படை அந்தணர் நூல். அந்தணர் நூலுக்கு அடிப்படை அறவாழி அந்தணனாகிய கடவுள்.

உலகில் அந்தணர் நூலும், அறமும் காக்கப்பட வேண்டுமானால் படைப்பின் தலைவனான கடவுளின் பிரதிநிதியாக விளங்கும், நாட்டின் தலைவனாகிய அரசனின் ஆட்சி நன்முறையில் செயல்பட வேண்டும். சமய இலக்கியங்கள் கடவுளைப் பேரரசனாக விளக்குகின்றன.

*அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்*
*நின்றது மன்னவன் கோல்* — 54

ஆகவே அறத்திற்கு அடிப்படை அந்தணர் நூல்; இவ்விரண்டிற்கும் ஆதி, மன்னவன் கோல்; அப்பெரு மன்னனாகிய அறவாழி அந்தணனே கடவுள். குணமென்னுங் குன்றேறி நிற்கும் அறவோனாகிய அவன் நெறி நில்லாதார், அவன் வெகுளியைக் கணமேயும் காத்தல் அரிது.

வள்ளுவப் பெருந்தகை 'அந்தணர்' என்னும் சொல்லை கடவுள் வாழ்த்து, நீத்தார் பெருமை, செங்கோன்மை ஆகிய இடங்களில் மட்டுமே ஆண்டுள்ளார். இம்மூன்று இடங்களிலும் அறத்துடன் இணைத்தே கூறியுள்ளார்.

*அறவாழி அந்தணன்—* 8

*அந்தணர் என்போர் அறவோர்* 30

*அந்தணர் நூற்கும் அறத்திற்கும்.* 543

ஆகவே, அந்தணனாகிய அறவோன் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மைபூண்டு அவ்வுயிர்கள் நீடு வாழ்வையடையும் படியாக அவைகளுக்குப் பொய்தீர் ஒழுக்க நெறியைக் காட்டி யுள்ளான். அந்நெறியைக் கூறுவதே அந்தணர் நூலாகிய மறைமொழி. அவன் நெறியில் நின்றார் நீடுவாழ்வார்.

இதுவரை நாம் கண்டவைகளிலிருந்து நீத்தாரைப்பற்றிய கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்தால்.

1. ஒழுக்கத்தின்கண் நிலைநின்று கடவுள் நிலையின் மேன்மையைத் துறந்தவன்.

2. வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் காணும்முதனூலின் மூலாதாரக்கருத்தாய் இருப்பவன்.

3. இறப்பவர்க்கெல்லாம் இறவாவாழ்வளித்து நீடு வாழ்வைக் கொடுக்கும் படியாக இறப்பை வென்றவன்.

4. இம்மையிலிருந்து மறுமைக்குச் சென்றவனல்ல. இம்மை மறுமை ஆகிய இருமையையும் அறிந்து இம்மைக்கு வந்து ஈண்டு அறம் பூண்டவன்.

5. வரன் என்னும் வைப்பாகிய, மணமகனும் கடவுளுக்கு வித்தாக விளங்குபவன். (கடவுளாகிய தந்தையையடக்கியவித்து)

6. தன் ஐம்புலனையும் பலியாக ஒப்புக் கொடுத்தவன்.

7. அகல்விசும்புளார் கோமானாகிய இந்திரன் சான்றாகத் தன் ஆற்றலை வெளிக்காட்டியவன்.

8. செயற்கரிய செயலைச் செய்தவன்.

9. உலகைத்தன்னிடம் கொண்டுவரும்படி ஐந்தின் வகை தெரிந்தவன்.

10. மனித உரு எடுத்த நிறைமொழியாகிய வார்த்தையானவன்.

11. மனித உரு எடுத்த அவ்வார்த்தையைப் பற்றிக் கூறுவதே மறை.

12. குணம் என்னுங் குன்றேறி நிற்பவன் அவன் ஒருவனே.

13. அவன் கணமேயுங் காத்தலரிய வெகுளியையுடையவன்.

14. மற்ற உயிர்களுக்குஞ்செந்தண்மைபூண்டு ஒழுகி, அறத்தை நிலைநாட்டித் தன்னுயிரைக் கொடுத்த அறவோன்.

இதையும் சுருக்கினால் :—

1. கடவுள் நிலையின் மேன்மையைத் துறந்தவன்.

2. இறப்பை வென்றவன்

3. இருமையையும் அறிந்தவன்.

4. கடவுளின் வித்தாய் விளங்குபவன்.

5. ஐம்புலனையும் பலியாக்கியதுடன் இந்திரன் சான்றாகத் தன் ஆற்றலை வெளிக்காட்டியவன்.

6. செயற்கரிய செய்தவன்.

7. ஐந்தின் வகை தெரிவான்.

8. மனித உரு எடுத்த வார்த்தை அவனே; அவனைக்கூறுவதே திருமறை.

9. குணமுடைய அவனிடம் வெகுளியும் உண்டு.

10. மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு தன்னுயிர்கொடுத்த அறவோன்.

மேலே கண்டவைகளை ஒருமுறைப்படி தொகுத்தால்:—

இருமை வகைதெரிந்த, கடவுளின் வித்தாகிய வார்த்தை, கடவுள் நிலையின் மேன்மையைத் துறந்து, ஐம்புலனுடன் மனித உருவை ஏற்று, ஐந்தின் வகை தெரிந்து, அறத்தை நிலைநாட்டி, மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு, தன்னுயிரைப் பலியாக ஒப்புக்கொடுத்து, இறப்பை

வென்று, ஓரைந்துங்காத்து இந்திரன் சான்ருகத் தன் ஆற்றலை வெளிக்காட்டி, செயற்கரிய செயலைச் செய்த, குணக்குன்ருகிய அவன் வெகுளி கணமேயும் காத்தல் அரிது. அவன் பெருமையை இந்நிலவுலகில் காட்டும் சான்ருக விளங்குவதே திருமறை.

இத்தொகுப்பு, இறை வரலாறு ஒன்றைக் கூறுவதைப்போன்று அமைந்துள்ளமை எண்ணி வியக்கத்தக்கதொன்ருகும். இத்தொகுப்பினுக்குச் சமமான வரலாறு ஒன்றை நாம் காணக்கூடுமாஞல் வள்ளுவர் பெருமைப்படுத்தும் நீத்தார் யார்? என்பது எளிதில் நமக்குப் புலனுகும்.

ஆகவே திருவள்ளுவர் காலத்தில் நம் தமிழகத்தில் நிலவிய பல்வேறு சமயங்களின் சமயவரலாற்றின் துணைகொண்டு மெய்ப்பொருள் காண்போம். திருவள்ளுவர் காலத்தைக் காணும் நாம் அதன் உட்குறிப்பு சிலவற்றை அறியவேண்டியுள்ளது.

திருவள்ளுவர் கி. மு. 31. இல் பிறந்ததாக ஆண்டு கணக்கிடும் முறை, இன்று தமிழ்மக்களிடையே பெருகி வருகிறது. திருவள்ளுவர் கி. மு. 31 இல் பிறந்தார் எனக் கொண்டு ஆண்டு கணக்கிடும் முறை தோன்றி இன்று நாற்பதாண்டுகள் கூட நிறைவு பெறவில்லை.

உலக வரலாற்றில் முக்கியமானவர்களுக்கு ஆண்டு கணக்கிடும் முறை உலகம் முழுவதும் பெருவழக்காம் இருப்பதையுணர்ந்த தமிழகப் பெருமக்களுள் சிலர் ஒன்றுகூடி, வள்ளுவர்க்கும் ஆண்டு கணக்கிடும் முறையை நிறுவ எண்ணினர். கிறித்துவிற்குமுன் வள்ளுவர் தோன்றினர் எனக்கொண்டால் அது வள்ளுவர்க்கும், வள்ளுவனை ஈன்றெடுத்த தமிழகத்திற்கும் சிறப்பாகும் என்ற நல்லெண்ணத்தினுல் வள்ளுர் பிறந்த ஆண்டாகக் கிறித்துவிற்கு

மூன் 31ஐக் கொண்டனர். இவ்வாறு முடிவெடுத்த பெருமக்களுள் ஒருவரை நான் சந்தித்து இதுபற்றி வினவியகாலை, அவர்கள் 'ஒருகாலக் கணக்கீடாக இதைக் கொண்டோமே யன்றி ஆராய்ச்சியின் அடிப்படையில் நிறுவி இவ்வாண்டு கண்டுபிடிக்கப்படவில்லை' எனத்தெரிவித்தார்கள். இவ்வாறு கி. மு. 31 என ஆண்டு நிறுவிய பெருமக்கள் சிலர் இன்றும்நம்மிடையேவாழ்கிறார்கள். அவர்களுடைய நல்லெண்ணத்திற்குத் தமிழ் மக்களாகிய நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்' அதே நேரத்தில் ஆராய்ச்சியாளர்களின் முடிவையும் நாம் அறிந்திருத்தல் அவசியமாகும்.

**திருவள்ளுவர் காலம் பற்றிய ஆராய்ச்சியாளர்களின் கருத்து:—**

1. வள்ளுவர் கடைச்சங்க காலத்தவர், என்பதும் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றெனப் படும் களவழிபாடிய பொய்கையாரும், இன்னு நாற்பதியற்றியகபிலரும் அச்சங்கப்புலவர்என்பதும் தொன்று தொட்டுப்பழம் புலவர் பலரும், பழைய உரைகாரரும், கம்பருக்கு முந்தியசயங்கொண்டார், கூத்தர் போல்பவருவம், கூறியுள்ள செய்தியாகும்.

*[திரு- ச- சோமசுந்தர பாரதியார் எம் ஏ. பி. எல் (திருவள்ளுவர்காலமும் வையாபுரிப்பிள்ளையவர்கள் கொள்கையும்)]*

2. வரலாற்றாசிரியர் கடைச்சங்க கால அளவினை கி. பி. முதல் மூன்று நூற்றாண்டென்பர்; கி. பி. 75 முதல் கி. பி. 225 க்குட்பட்டகாலமென வரையறுப்போரும் உண்டு.

எனவே குறள் சங்க முடிவிலோ அன்றி, அதனை அடுத்தோ இயன்றிருக்கவேண்டும் என ஆசிரியர்கள் கருதுவது பொருத்தமேயாகும்.

*[திரு. மு கோவிந்தசாமி எம். ஏ. பி. ஒ. எல். இலக்கியத் தோற்றம். பக் 10, 54, 57 ]*

3. வள்ளுவர் காலம் கிறிஸ்துவிற்கு முன் என்று சொல்லுவதுதான் பெருமை என்று நினைக்கின்றனர் சிலர். கிறிஸ்துவுக்கு 30 ஆண்டுகளுக்கு முன் வள்ளுவர் பிறந்தார் என வைத்துக்கொண்டு திருவள்ளுவர் ஆண்டைக் கணக்கிட்டு வருகின்றனர். திருவள்ளுவர் கி. பி. 6-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்திருத்தல் வேண்டும். திருக்குறள் அப்பொழுதுதான தோன்றியிருக்க வேண்டும் என்பது சில ஆராய்ச்சியாளர்களின் கருத்து.

*[திரு சாமி சிதம்பரனார் திருக்குறள் பொருள் விளக்கம் பக், 6.]*

4. மறைமலையடிகள் தாமே முன்னின்று ஏற்படுத்திய திருவள்ளுவர் ஆண்டு முறையின் தொடக்கத்தை அவர் கி. மு. 31-ம் ஆண்டிலிருந்து கணித்துக் கொண்டது இதனாலேயேயாகும். ஆயினும் இதுவே முடிந்த முடிவு என்று ஏற்றுக்கொள்வதற்குரிய உறுதியான சான்று எதுவும் கிடையாது.

*[பன்மொழி புலவர் கா. அப்பாத்துரையார். மணிவிளக்கவுரை I. பக் 9]*

5. பிள்ளையவர்கள் கி. பி. முதலாவது நூற்றாண்டினது என்று அறுதியிட்டுரைத்த சங்கச் செய்யுட்கள். மேற்காட்டியவற்றால், திருக்குறளின் சொல்லும் பொருளும் தோன்றி விளங்க எடுத்தாண்டமையால் திருக்குறளும் திருவள்ளுவனாரும் அக்காலத்துத் திகழ்ந்தமை புலப்பாடன்றோ?

[திரு தி. பழனியப்ப பிள்ளை எம். ஏ. திருக்குறள் பொருட்பால் முகவுரை.]

6. ஆகவே வள்ளுவர் கி. பி. 2-ஆம் நூற்றாண்டினர் என்பது உறுதியே.

*[திரு பார்லூர் கண்ணப்ப முதலியார், எம். ஏ., பி. எல்., தமிழ்நூல் வரலாறு பக். 139]*

7. எனவே, திருவள்ளுவர் இருந்து, திருக்குறள் பாடிச் சிறப்புற்ற காலம் சங்கத் தொகை நூற் பாட்டுக்கள் தோன்றிய காலமாம் : சுருங்கக் கூறின், சங்க காலம் என்று கூறலாம்.

*வித்துவான். சித்தாந்த கலாநிதி திரு. ஒளவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் தமிழ் ஆராய்ச்சி விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.*

—தெய்வப்புலவர் திருவள்ளுவர் பக். 14

ஆகவே திருக்குறள் கி. பி. முதல் மூன்று நூற்றாண்டில் தமிழகத்தில் நிலவிய சங்க நூல்களுள் ஒன்று என்பது உறுதிப்படுகிறது. சங்க காலத்தில் நம் தமிழகத்தில் நிலவிய சமயக் கருத்துக்களுடன் இப்பொழுது நாம் பார்த்துள்ள நீத்தாரைப் பற்றிய, குறிப்புக்களை ஒப்பிட்டு நோக்கினால் மெய் விளங்கும். நாம் பார்த்த நீத்தாரைப் பற்றிய குறிப்புக்களில் தலைமையானவையாக விளங்குபவை.

1. கடவுளின் வார்த்தையாகிய வித்து மனிதனாயிற்று.

2. அறத்தைப் பூண்டு அறத்தைக் காட்டியது

3. மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு தன்னுயிரைப் பலியாக்கியது.

4. செயற்கரிய செயலைச்செய்து தன் ஆற்றலைக் காட்டி இறப்பை வென்றது.

5. அதைக் காட்டி நிற்பதே மறைமொழி.

சங்க காலத்தில் தமிழகத்தில் நிலவிய சமயங்களுள் முக்கியமானது சமணம். இதன் கொள்கைகளுடன் மேலே கண்ட நீத்தாரைப் பற்றிய கருத்துக்களை ஒப்பிட்டுப் பார்த்தால் ஒற்றுமைக் கருத்துக்களைக் காணமுடியவில்லை. சமண சமயத்தின் கருத்துப்படி மனிதர் மேனிலையடைந்து, மற்ற சமயங்கள்

கூறும் இறைவன் நிலையை அடைகின்றனரேயன்றி சமண சமயத்தில் இறைவனும் இல்லை; இறைவன் மனிதனாவதும் இல்லை. கடவுள் கருத்தை ஏற்றுக் கொள்ளாதவர் சமணர். 'பிறவிச் சுழலில் ஒவ்வொரு ஆன்மாவும் தனது நல்வினை தீவினைப் பயனாகப் பல்கோடிப் பிறவி எடுக்கிறது. பக்குவப்பட்ட ஆன்மா பிறவிச் சுழலிலிருந்து விடுபடுகிறது. ஆன்மாவை யாராலும் படைக்கவோ அன்றி அழிக்கவோ முடியாது. ஆகவே படைக்கும் அழிக்கும் ஆற்றல் பெற்ற கடவுள் கொள்கை தவறு' இதுவே சமணம்.

'இறைவனடி சேராதார் பிறவிப் பெருங்கடல் நீந்தார்' என்பது சமண சமயத்திற்கு முற்றிலும் மாறுபட்ட கொள்கை. திருக்குறளின் அடிப்படைக் கொள்கைக்கும் சமணத்தின் அடிப்படைக் கொள்கைக்குமுள்ள முரண்பாடுகளை நமது முந்தைய நூல்களாகிய 'திருவள்ளுவர் கிறித்தவரா?' ஐந்தவித்தான் யார்?' ஆகிய இரண்டும் தெளிவாக விளக்குகின்றன.

சமணத்தைப் போன்றே பௌத்தமும் கடவுள் கொள்கைக்கு முரணானதே. ஆகவே அதுவும் திருக்குறளின் அடிப்படைக் கொள்கைக்கு முரணானது.

அடுத்து நாம் பார்க்கக் கூடியது ஆரியக் கொள்கை மேலிட்ட வைதீக சமயம். இச்சமயம் கடவுள் கருத்தை ஏற்றுக்கொள்ளும் சமயமே. இச்சமயத்திலும் கடவுள் மனிதனாக வந்த அவதாரங்களைப் பற்றிய புராணங்கள் உண்டு. ஆனால் இது பல தெய்வ வணக்கக் கோட்பாட்டையுடையது. திருவள்ளுவரோ தெளிவாக ஒரே கடவுளையே வணங்கினார் என்பதைத் திருக்குறள் கூறுகிறது.

அடுத்து இறைவன் மனிதனாக வந்தது ஒரு முறை மட்டுமல்ல. அதைக் குறித்துப் பற்பல விதமான பற்பல புராணங்கள் உண்டு. ஆனால் அப்புராணக் கதைகள் அத்தனையும், இறைவன் மனிதனாக வந்து பொய்தீர் ஒழுக்க நெறியை நிலை நாட்டினார் என்றோ, மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு, தன்னுயிரைப் பலியுணவாக்கிய ஐந்தவித்தான் என்றோ, அகல்விசும்புளார் கோமான்சான்றாக செயற்கரிய செய்து தன் ஆற்றலைக் காட்டி இறந்தாரினும் மாறுனன் என்றோ கூறவில்லை. இதை அடிப்படையாகக் கொண்டதே மறை என்ற நிலையும் இல்லை. ஆகவே ஒழுக்கத்தில் நிலை நின்று கடவுள் நிலையின் மேன்மையைத் துறந்தஒழுக்கத்து நீத்தாரை வைதீக சமயத்திலும் காணமுடியவில்லை. (இதனினும் விளக்கம் வேண்டுவோர் திருவள்ளுவர் கிறித்தவரா? ஐந்தவித்தான் யார்? ஆகிய இரு நூல்களையும் நோக்குக.)

அடுத்து கி. பி. முதல் நூற்றாண்டில் தமிழகத்தில் வேரூன்றி, தமிழ் நாட்டின் முப்பிரிவுகளில் முதல் இடத்தை வகிக்கும், சேர நாட்டில் வளர்ந்து மற்ற இரு நாடுகளிலும் வேகமாகப் பரவிய கிறித்தவத்தை நோக்குவோம். திருக்குறளை முதன்முதலில் வேற்றுமொழியில் மொழி பெயர்த்த பெருமை கிறித்தவரையே சாருகிறது.

[திருக்குறளின் பெருமையை யுலகத்துக்கு விரித்தவர்கள் கிறித்தவ பாதிரிமார்கள். அவர்கள் தாம் தமிழுக்கு ஆக்கம் தேடித் தந்தவர்கள். வான்புகழளித்தவர்கள். அவர்க்கெமது நன்றியுரித்தாகுக.

[புலவர் வே த. அர்சுனனார், திருக்குறள் இடைப்பாயிரமும் நூற்பாயிரமும், பக். 8. (1953) ]

நம் தீந்தமிழ் மொழியிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களையோ, மகாபாரதம், இராமாயணம்

போன்ற காவியங்களையோ ஏன், சங்க நூல்களில் வேறெதையுமோ மொழி பெயராத அந்நியர்கள் திருக்குறளை மட்டும். வேற்று மொழியில் மொழி பெயர்க்கக் காரணம் என்ன? இன்று திருக்குறள் எத்தனையோ மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. ஆனால் மொழி பெயர்த்தவர்களில் ஒரு சிலரைத் தவிர மீதி அத்தனை பேரும் கிறித்தவர்களே ஏன்? தமிழகத்தின் மற்ற இலக்கியங்களில் காணாத ஏதோ ஒன்று அவர்களை இதிலே ஈர்த்திருக்கிறது. அது என்ன?

மற்றெல்லா நூல்களையும் இச்சமயத்தைச் சார்ந்ததெனச் சுட்டிக்கூறும்தமிழகம், திருக்குறளில் எதுவும் சொலல முடியாது திகைக்கிறதே, ஏன்? திருக்குறளை அறநூலா? சமயநூலா எனப்பட்டி மன்றம் அமைத்து வாதிட்டுச் 'சமய நூலே' என முடிவு கட்டும் தமிழகம், எச்சமய நூல் என எண்ணிப் பார்க்கக் கூடப் பின் வாங்குவதன் உட்பொருள் என்ன? (1971 மேத் திங்கள் சென்னை பாலர் அரங்கில் நடைபெற்ற திருக்குறள் மகாநாட்டில் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடைபெற்ற பட்டி மன்றத்தில் 'திருக்குறள் சமய நூலே' என முடிவு செய்யப்பட்டது.) சமயச் சண்டையில் புகவேண்டாம் என்ற நல்ல நோக்கம் காரணமாக இருக்கலாம். ஆனால் சமயச்சண்டை வேறு. ஒன்றினை ஆய்ந்து மெய்ப் பொருள் காண்பது வேறு. எச்சமயம் உயர்ந்தது என்பதல்ல இங்கு வேண்டுவது. திருக்குறளின் உண்மைநிலை என்ன? என்பதே இங்கு காண வேண்டியது. ஆனால் பற்பல அறிஞர்கள் இதுவரை திருக்குறளைத் தத்தம் சமயநூலே என எழுதியும், பேசியும் திருவள்ளுவர் படத்திற்குச் சமயச் சின்னங்கள் இட்டும் வந்த போதிலும், அவையாவும் காலவெள்ளத்தால் அடிக்கப்பட்டு விட்டன. ஏன்? இதுவரை காண

முடியாக் கருத்து ஒன்று வள்ளுவத்தில் உண்டு என்பதனால் அல்லவா! இதுவரை அறிஞர் பெருமக்களால், இவ்வளவு காலம் கடந்த பின்னரும் ஆழம் காண முடியாப் பகுதிகள் திருக்குறளில் உள்ளன, என ஒப்புக்கொள்ளப்படக் காரணம் என்ன?

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவை யாவும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய குறிப்புகளாகும். முன்னர் நாம் ஆராய்ந்தவைகளிலிருந்து வள்ளுவர் பெருமைப்படுத்தும் நீத்தாரைப் பற்றிய குறிப்புகள் சமணம், பௌத்தம், இந்து ஆகிய சமயங்களில் இருக்க வாய்ப்பில்லை என்பதை அறிந்தோம். இப்போது வள்ளுவர் கூறும் நீத்தாரைக் கிறித்தவக் கொள்கையுடன் ஒப்பிட்டு நோக்குவோம்.

கிறித்தவக் கொள்கையின்படி 'கடவுள் சாவுக்குட்பட்ட மனிதர்களை, அச்சாவிலிருந்து மீட்டு, அவர்களுக்கு நீடு வாழ்வைக் கொடுக்கும்படியாக தன் நிலையிலிருந்து பிரிந்து, மனிதனாகி இயேசு கிறித்து என்னும் பெயருடன் உலகில் தோன்றி, மக்களுக்குப் பொய்தீர் ஒழுக்கத்தையும் (truth), நெறியையும் (way) காட்டியதுடன் அவர்களுக்கு நீடுவாழ்வு (life) அளிப்பவனாகவும் விளங்கி, மற்ற உயிருக்கும் செந்தண்மை பூண்ட அறவோனாகிய அவன் மனிதர் அடையவேண்டிய தண்டனையைத் தான் ஏற்று, சிலுவை மரத்தில் தன் உயிரைப் பலியாக்கி, ஐந்தவித்தவனானான். இறப்பவர்களுக்கு, இறவாமையை அளிக்கும் அவன், இறப்பை வென்றுசெயற்கரிய செயலாகிய தன் ஆற்றலை அகல் விசும்புளார் கோமான் சான்றாகக் காட்டி உயிர்ந்தெழுந்தான். அவனைப் பற்றிக் கூறுவதே விவிலியமாகிய திருமறை.'

மேலே நாம் காணும் கிறித்தவக் கருத்துக்கள், வள்ளுவக் கருத்துக்களுடன் முழு அளவில்

ஒப்புமையுடையனவாக விளங்குகின்றன. முழுமை யாகப் பார்க்குங்கால் ஒப்புமையுடையனவாக விளங்கும் கிறித்துவக் கருத்துக்களையுடைய விவிலி யத்தின் நேரடி மறைமொழிகளுடன், வள்ளுவ மாகிய தமிழ் மறையின் குறட்பாக்களை ஒப்பிட்டு நோக்குவோம்.

விவிலியம் :

'கிறிஸ்து இயேசுவில் இருந்த மனநிலையே உங்களிலும் இருப்பதாக கடவுள் தன்மையில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை விடாமல் பிடித்துக்கொண்டிருக்க வேண்டிய தொன்றாகக் கருதவில்லை.

ஆனால், தம்மையே வெறுமையாக்கி, (நீத்து) அடிமையின் தன்மை பூண்டு, மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, தம்மைத் தாழ்த்திச் சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிபவ ரானார். ஆதலால்தான் கடவுள் அவரை எல்லா ருக்கும் மேலாய் உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.' [பிலிப் 2 : 5-7]

வள்ளுவம் :

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு

விவிலியம் :

'மேலிருந்து வருபவன், எல்லாருக்கும் மேலான வன். மண்ணிலிருந்து உண்டானவன் மண் ணுலகைச் சார்ந்தவன். அவன் மண்ணுலகைச் சார்ந்தவனாகவே பேசுகிறான். விண்ணிலிருந்து வருபவரோ, எல்லாருக்கும் மேலானவர். தாம்

கண்டதையும் கேட்டதையும் குறித்தே சாட்சி பகர்கின்றார்.' [யோவான் 3 : 31, 32]

வள்ளுவம் :

> இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார்
> பெருமை பிறங்கிற் றுலகு.

விவிலியம் :

'அவர் மேல் நம்பிக்கை கொள்ளும் எவனும் அவர் குற்றமற்றவராய் இருப்பதுபோலத் தன்னையும் குற்றமற்றவனாய்க் காத்துக்கொள்வான்..... அலகை ஆதிமுதல் பாவம் செய்து கொண்டு வருகிறது. இவ் வலகையின் செயல்களைத் தொலைக்கவே கடவுளின் மகன் தோன்றினார். கடவுளிடமிருந்து பிறந்தவன். பாவஞ் செய்வதில்லை. ஏனெனில் அவர் இட்ட 'வித்து' அவனுக்குள் நிலைத்திருக்கிறது. அவன் பாவத்தில் வாழ முடியாது. ஏனெனில் அவன் கடவுளிடமிருந்து பிறந்திருக்கிறான்.'

[1 யோ. 3 : 3, 8-9]

வள்ளுவம் :

> உரன் என்னும் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
> வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து.

விவிலியம் :

'நல்ல ஆயன் நானே. நல்ல ஆயன் ஆடுகளுக்குத் தன்னுயிரைக் கொடுப்பான்....ஆடுகளுக்காக என்னுயிரைக் கொடுக்கிறேன்.... என்னுயிரை மீண்டும் பெற்றுக்கொள்ளும்படி, நான் அதைக் கையளிக்கிறேன்........உயிரைக் கையளிக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு ; அதனை மீண்டும் பெற்றுக் கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு.'

[யோவான் 10 : 11, 15, 18]

'ஆண்டவரின் தூதர் வானின்று இறங்கி வந்து, கல்லைப்புரட்டி, அதன்மேல் அமர்ந்தார். அவருடைய தோற்றம் மின்னல் போன்றும், உடை உறை பனிபோல் வெண்மையாயும் இருந்தன. காவலர் அவரைக் கண்டு அஞ்சி நடுங்கிச் செத்தவர்போல் ஆயினர். வான தூதர் பெண்களை நோக்கி, 'அஞ்சாதீர்கள்; சிலுவையில் அறையுண்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை. தாம் கூறியபடியே உயிர்த்துவிட்டார். வாருங்கள் ஆண்டவரைக் கிடத்திய இடத்தைப் பாருங்கள்; விரைந்து செல்லுங்கள். அவர் இறந்தோரிடமிருந்து உயிர்த்து விட்டார் என்று அவர் சீடருக்குச் சொல்லுங்கள். இதோ! உங்களுக்கு முன் அவர் கலிலேயாவுக்குப் போகிறார். அங்கே அவரைக் காண்பீர்கள். இதோ! உங்களுக்குச் சொல்லி விட்டேன்'' என்று சொன்னார். அவர்களும் அச்சத்துடனும் மிகுந்த மகிழ்ச்சியுடனும் விரைவாகக் கல்லறையை விட்டு அகன்று, அவருடைய சீடருக்கு அறிவிக்க ஓடினார்கள்.

[மத்தேயு 28 : 2-8]

**வள்ளுவம் :**

*ஐந்தவித்தானாற்றல் அகல் விசும்புளார் கோமான்*
*இந்திரனே சாலுங்கரி.*

*செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்*
*செயற்கரிய செய்கலா தார்*

விவிலியம் : ஆதியிலே வார்த்தை (word) இருந்தார். அவ்வார்த்தை கடவுளோடு இருந்தார். அவ்வார்த்தை கடவுளாயும் இருந்தார்...... அவர் வழியாகவே அனைத்தும் உண்டாயின.... வார்த்தை மனுவுருவானார். நம்மிடையே குடிகொண்டார்......அவர் அருளும் உண்மையும் நிறைந்து விளங்கினார்.... அவருடைய நிறைவி

லிருந்து நாம் அனைவரும் அருளுக்குமேல் அருள் பெற்றுள்ளோம். ஏனெனில் திருச்சட்டம் மோயீசன் வழியாக அளிக்கப்பெற்றது. ஆனால், அருளும் உண்மையும் இயேசு கிறிஸ்து வழியாக வந்தன.

யோவான் 1 : 1, 3, 14 16 17

இயேசு அவர்களை நோக்கி, ''அறிவில்லாதவர்களே, இறைவாக்கினர்கள் கூறியதெல்லாம் விசுவசிப்பதற்கு மந்த புத்தியுள்ளவர்களே, மெசியா இப்பாடுகளைப் பட்டன்றோ மகிமையடைய வேண்டும்' என்று சொல்லி, மோயீசன் முதல் இறைவாக்கினர்கள் அனைவரும் எழுதி வைத்த வாக்குகளிலிருந்து தொடங்கி தம்மைக் குறித்த மறைநூல் பகுதிகளுக்கெல்லாம் விளக்கம் தந்தார்.

லூக்கா 24 : 25-27

வள்ளுவம் :

*நிறைமொழிமாந்தர் பெருமைநிலத்து*
*மறைமொழி காட்டிவிடும்.*

விளக்கம் :

'மறைமொழி என்பது.........எல்லையற்ற மறை உட்பொருள் வளம் உடைய தெய்வீக இன நற்செய்தி (**Gospel - God spell - Good spell**) என்பதாகும். கிறித்தவத் திருமறை ஏட்டில் ஆதிபகவன் நிலையுடைய இயேசு பெருமான் வாய்மொழிச் செய்தி அடங்கிய பிரிவுகள் இன்றும் இப்பெயராலேயே அழைக்கப்படுவது காணலாம்'.

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்
—மணிவிளக்கவுரை 1 பக். 708

விவிலியம் :

விதை கடவுளின் வார்த்தை! லூக்கா 8 : 11

அகரமும் னகரமும்—முதலும் இறுதியும், தொடக்கமும் முடிவும் நானே. [திருவெளிப் 22 : 13]

மணமகனுக்கென அலங்கரிக்கப்பட்ட மணமகளைப் போல அது மலர்ந்தது. பின் அரியணையிலிருந்து ஒரு பெருங்குரலைக் கேட்டேன். அக்குரல், 'இதோ கடவுளின் இல்லம் மனிதரிடையே உள்ளது. அவர்களோடு அவர் குடி கொள்வார்......என்றது'

**வெளிப். 21 : 2—8**

**வள்ளுவம்:**

***சுவை ஒளி ஊறு ஓசை நாற்ற மென்றைந்தின் வகை***
***தெரிவான் கட்டே யுலகு.***

**விவிலியம் :**

கடவுளின் செயலும் இத்தகையதே. தமது சினத்தைக் காட்டவும், தமது வல்லமையைத் தெரியப்படுத்தவும் அவர் விரும்பிய போதிலும், அழிவுக்கும் அவருடைய சினத்துக்கும் இலக்கான கலன்கள் மட்டில், கடவுள் மிக்க பொறுமையாய் இருந்தாராயின், யார் என்ன சொல்ல முடியும்? அதன் மூலம் தம்மாட்சிமையையும் இரக்கத்தையும் பெறுமாறு,அவர் தயாரித்திருந்த கலன்கள் மட்டில், தமது மாட்சிமையின் வளத்தைத் தெரியப்படுத்த விரும்பினர். அத்தக்கலன்கள் யூதர்களிடையிருந்து மட்டுமன்று, புறவினத்தாரிடையிலிருந்தும்அவரால் அழைக்கப்பட்ட நம்மையே குறிக்கின்றன.

**உரோமர் 9: 22—24**

'இந்நன்றியுணர்ச்சியில் பயபக்தியோடும், அச்சத்தோடும் கடவுளுக்கு ஏற்றமுறையில் வழிபாடு செய்வோமாக. ஏனெனில் நம்கடவுள் சுட்டெரிக்கும் நெருப்பாக இருக்கிறார்.'

**எபிரேயர் 12:29.**

**வள்ளுவம் :**

***குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி***
***கணமேயுங் காத்தலரிது.***

**விவிலியம் :**

இயேசு திரளான கூட்டத்தைக் கண்டு, மலை மீது ஏறி அமர, அவருடைய சீடர் அவரை அணுகினர்; அவர் திருவாய் மலர்ந்து போதிக்கலானார்.

*மத் 5: 1—2.*

கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இதனால் அன்பு இன்னதென்று அறிந்தோம்,

*1. யோவான் 3 : 16.*

கிறிஸ்துவைப் பாருங்கள்; நீதியுள்ள அவர் அநீதருக்காக இறந்தார். நம்மைக் கடவுளிடம் சேர்க்க, பாவங்களின் பொருட்டு ஒரே முறையாக இறந்தார்.

**வள்ளுவம் :**

*அந்தண ரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்*
*செந்தண்மை பூண்டொழு கலான்*

இதுவரை விவிலியத்தையும், வள்ளுவத்தையும் கண்டோம். நீத்தார் யார்? எனப்பலகோணங்களிலும் நோக்கிய நமக்கு விடையை, விவிலியம் ஒன்றே தெளிவாக அறிய வழிவகுக்கிறது. கடவுள் வாழ்த்துடன் இணைத்து, வள்ளுவர் நீத்தார் பெருமையைக் கூறிய காரணமும் இப்போது தெள்ளென விளங்குகிறதெனலாம்.

மக்களுக்கு நீடுவாழ்வைக் கொடுக்கும்படியாக எண்ணங் கொண்ட கடவுள், பொய்தீர் ஒழுக்க நெறியில் நின்று, கடவுள் நிலையின் மேன்மையை நீத்து (ஒழுக்கத்து நீத்து) ஐம்புலனை ஏற்று, இயேசுவாகிய மனிதனாகி, அறம் பூண்டு, மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு சிலுவைமரத்தில் ஐந்தவித்தார். அவரே வரன் என்னும் வைப்பிற்கோர் வித்தாகிய நிறைமொழி மாந்தர். இறவாமையாகிய நீடுவாழ்வை மற்றவர்களுக்குக் கொடுக்கும் படியாக, செயற்கரிய செயலாகிய

ஆற்றலின் மூலம் சாவை வென்றார். அவர் உயிர்த்தெழுந்தமைக்கு அகல் விசும்புளார் கோமான் சான்றாக விளங்குகிறான். அவர்காட்டிச் சென்றதே அறம். அவரைப்பற்றிக்கூறுவதே மறைமொழியாம் திருமறை.

ஆகவே திருவள்ளுவர் பெருமைப்படுத்தும் ஒழுக்கத்து நீத்தார், மறைமொழியாகிய விவிலியம் காட்டி நிற்கும், நிறை மொழி மாந்தராகிய இயேசு பெருமானே எனக்கொண்டால், அது எல்லாவகையிலும் பொருந்துவதாகத் தெரிகிறது. இதைமேலும் ஆயும் உங்கள் சிந்தனைக்கு:—

1. வள்ளுவர் பெருமைப்படுத்தும் ஒழுக்கத்து நீத்தார் யார்? துறவியா?.
2. துறவியர் எனில்,இல்லறம் இழிவுடையதா?
3. ஒழுக்கத்து நீத்தார் ஒருவரா? பலரா?
4. பலரெனில் அதிகாரத்தினுள் ஒருமை முடிவுகள் ஏன்?
5. ஒருவரே எனில் அந்த ஒருவர் டவுளா? மனிதரா?.
6. கடவுளே எனில் பாயிரத்தில் கடவுள் வாழ்த்து ஏன்?
7. மனிதரே எனில் கடவுளுடன் இணைத்துப் பெருமைப்படுத்தப்படும் அம்மனிதர் யார்?
8. ஐந்தவித்தான், அந்தணன் என, கடவுளுக்குக் கொடுக்கப்பட்ட பெயர்கள் மனிதனுக்குப் பொருந்துமா?.
9. 'நீத்தார்' எனக் குறிக்கப்படுகின்றமையின் எதை நீத்தார்? ஏன் நீத்தார்?
10. நிலையஞ்சி நீத்தாருக்கும், ஒழுக்கத்து நீத்தாருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

**திருவள்ளுவர் பெருமைப்படுத்தும்–**

**நீத்தார் யார்?.**